بسم الله الرحمن الرحیم نحمدہ ونصلی علی رسولہ الکریم وعلی عبدہ المسیح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி 4

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian TAMIL

இதழ் 37 & 38

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அ.கலீல் அஹ்மது

12-19 முஹர்ரம் 1441 ஹிஜ்ரி கமரி 12-19 தபூக் 1398 தப்லீக் ஹிஜ்ரி ஷம்ஸி
12-19 செப்டம்பர் 2019


## அல்லாஹ்வின் கட்டளை

وَسَارِعُوْٓا اِلٰى مَغْفِرَةٍ مِّنْ رَّبِّكُمْ
وَجَنَّةٍ عَرْضُهَا السَّمٰوٰتُ
وَالْاَرْضُ ۙ اُعِدَّتْ لِلْمُتَّقِيْنَ

மேலும் நீங்கள், உங்கள் இறைவனிடமிருந்து இறங்கக்கூடிய மன்னிப்பாலும், வானங்கள், பூமி ஆகியவற்றின் மதிப்பைக் கொண்டதன் இறையச்சமுடையோருக்கு ஏற்படுத்தப்பட்டுள்ளதுமான சொர்க்கத்தின்பாலும் விரைந்து செல்லுங்கள். (3:134)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய –தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி –யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

## திருக்குர்ஆன் முழு மனித மனித இனத்திற்காகவே அருளப்பட்டதாகும். ஒரு குறிப்பிட்ட நாட்டிற்காகவோ, சமுதாயத்திற்காகவோ, காலத்திற்காகவோ அல்ல

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

### அற்புதத்தின் தனித்தன்மை

அனைத்து விதமான சிறப்பம்சங்களையும் கருத்தில் கொள்வதுதான் அற்புதத்தின் தனித்தன்மையாகும். விளக்கங்களும் தெளிவுகளும் விடுபட்டு விடக்கூடாது. இந்த அற்புதம் சூரியனைப்போல் பிரகாசிக்கின்ற திருக்குர்ஆனுக்கே உரியது. அது அனைத்து விதமான அற்புதங்களை வெளிப்படுத்தக் கூடிய சக்தியை தன்னகத்தே கொண்டுள்ளது. பைபிளைப் போன்று இவ்வாறு "ஒரு கன்னத்தில் அடித்தால் மறு கன்னத்தையும் காட்டுங்கள்" என்று கூறவில்லை. இந்த போதனை மனித இயல்பிற்கேற்ப எந்த அளவுக்கு ஞானமிக்கதாக இருக்கிறது என்ற சிந்தனை எழுகின்றது?

இதற்கு நேர் மாற்றமாக திருக்குர்ஆனின் போதனையை நாம் படித்துப் பார்த்தால் தெரிய வருவது என்னவென்றால், மனித சிந்தனைகள் இப்படிப்பட்ட ஆற்றல்களை எல்லா நிலையிலும் வெளிப்படுத்த முடியாது என்பதை நம்மால் உணர முடிகின்றது. மேலும் இப்படிப்பட்ட முழுமை பெற்ற குறையில்லாத போதனை உலக சிந்தனைகள் மற்றும் எண்ணங்களின் வெளிப்பாடாக இருக்க முடியாது. நமக்கு முன்னால் ஆயிரக்கணக்கான தேவையுடையவர்கள் இருக்கும்போது ஒருவர் அல்லது இருவருக்கு நாம் ஏதாவது கொடுத்து விட்டு மற்றவர்களைப் பற்றி சிந்தித்துக் கூடப் பார்க்கவில்லை என்றால் அது சாத்தியமாகுமா?

அவ்வாறுதான் பைபிள் ஒரு பக்கத்தை மற்றும் பார்க்கின்றது. மறுபக்கத்தின் பக்கம் அதனுடைய சிந்தனை இல்லை. நாம் பைபிளின் மீது அவதூறு கூறவில்லை. மாறாக, இது யூதர்களின் தீய நடத்தையின் விளைவாகும். அவர்களின் தகுதிக்கு ஏற்றவாறே பைபிளில் இறங்கியது. "ஆன்மா எவ்வாறோ அவ்வாறே வானவர்களின் வருகையும் இருக்கும்" இதில் மற்றவரை குறை கூறுவதில் என்ன பயன்?

### பைபிளின் போதனை ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே உரியது

இதைத் தவிர பைபிளின் போதனைகள் ஒரு குறிப்பிட்ட இடத்திற்கும், ஒரு குறிப்பிட்ட சமுதாயத்திற்காகவும், ஒரு காலகட்டத்திற்கு மட்டுமே உரியன என்பது பைபிளின் சட்டமாகும். எவ்வாறு ஆங்கிலேயர்கள் ஒரு குறிப்பிட்ட காலம் மற்றும் இடத்திற்கு மட்டுமே ஒரு ஆணையைப் பிறப்பிக்கின்றார்களோ மேலும் அதற்கான கால அவகாசம் முடிந்த பிறகு அதற்கு எந்த ஒரு பயனும் இருக்காது. அதேபோன்று பைபிளும் ஒரு குறிப்பிட்ட சாராருக்கு உரிய போதனையாக மட்டுமே உள்ளது.

மாறாக, பொதுவான அனைவருக்குமான போதனைகள் அதில் இல்லை. ஆனால் திருக்குர்ஆனின் போதனைகள் அனைவருக்கும் உரியதாகும். அது இறுதிநாள் வரை அனைத்து மக்களுக்கும் எல்லா காலகட்டத்திற்குமான கட்டளைகளைக் கொண்டதாகும். திருக்குர்ஆன் மனித குலத்திற்காகவே அருளப்பட்டது. அது அல்லாமல், குறிப்பிட்ட நாட்டிற்காகவோ, சமுதாயத்திற்காகவோ, காலத்திற்காகவோ அல்ல.

وَاِنْ مِّنْ شَيْءٍ اِلَّا عِنْدَنَا خَزَآئِنُهٗ ۫ وَمَا نُنَزِّلُهٗٓ اِلَّا بِقَدَرٍ مَّعْلُوْمٍ

எல்லாப் பொருள்களின் (எல்லையற்ற) கருவூலங்களும் எம்மிடம் உள்ளன. ஆனால் அதனைக் குறிப்பிட்ட ஓர் அளவிலேயே நாம் இறகுகின்றோம். (15:22)

பைபிளின் தேவை எந்த அளவிற்கு இருந்ததோ அதே அளவிற்கு இறங்கியது. ஆகவே தான் பைபிளின் சுருக்கத்தை ஒரே பக்கத்தில் எழுதிவிடலாம்.

### திருக்குர்ஆன் எல்லாக் காலகட்டத்திற்கும் உரியதாகும்

திருக்குர்ஆனின் அவசியம் இருந்தது என்றால் அது அனைத்து காலகட்டத்தின் சீர்திருத்தத்திற்காக இருந்தது. திருக்குர்ஆனின் நோக்கம் மிருகங்களைப் போல உள்ளவர்களை மனிதனாக ஆக்குவதற்காகவும், பண்புள்ள மனிதனை மார்க்கப் பற்றுள்ள மனிதனாக ஆக்கக்கூடியதாக இருந்தது. அதன் மூலம் இஸ்லாமிய சட்ட திட்டங்கள் மற்றும் கட்டளைகளுடன் ஒரு விதமான தொடர்பு ஏற்பட வேண்டும் என்பதே ஆகும்.

மேலும் திருக்குர்ஆனின் நோக்கம் இறை தொடர்புடைய மனிதனாக ஆக்குவதே ஆகும். இந்த வார்த்தை சுருக்கமாக இருந்தபோதிலும் அதில் ஆயிரம் பிரிவினர்களுக்கான போதனை காணப்படுகிறது. யூதர்கள் இயற்கை வணங்கிகள், நெருப்பு

*(தொடர்ச்சி 13 ஆம் பக்கம்...)*

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**அஹ்மதிகள் மட்டும்தான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மையான மகத்துவத்தை உலகத்தில் எடுத்துரைக்கின்றனர். (பெனின் நாட்டிலுள்ள முஸ்லிம் சமூகத்தின் துணை தலைவர்)**

**அஹ்மதி உறுப்பினர்களின் தர்பிய்யத் இஸ்லாமிய போதனைகளுக்கேற்ப செய்யப்பட்டுள்ளது... இன்று ஏதாவதொரு ஜமாஅத் இஸ்லாத்தின் உண்மையான பிரதிநிதித்துவமாக விளங்க முடியுமென்றால் அது அஹ்மதிய்யா ஜமாஅத் மட்டுமே.**

**இன்று இஸ்லாம் அஹ்மதிய்யத்தின் மூலமாக பரவுகிறது**

**இறைவன் மீது ஆணையாக! எனது அனைத்து சந்தேகங்களும் நீங்கி விட்டது. மாநாட்டில் கலந்து கொண்டு எனக்கு நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. அதாவது இன்று உலகத்தில் ஏதாவதொரு ஜமாஅத் இஸ்லாத்தின் பிரதிநிதித்துவமாக விளங்குகின்றதென்றால் அது அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தே ஆகும்**

**யூ.கே ஆண்டு மாநாட்டின் சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் விருந்தினர்களுக்கு தொண்டாற்றக்கூடிய நற்பாக்கியத்தைப் பெற்றவாறு தமது செயல்களின் மூலம் உண்மையான இஸ்லாத்தின் முகத்தை வெளிப்படுத்திக் காட்டிய பணியாளர்கள் மற்றும் தன்னார்வத் தொண்டர்களுக்காக நன்றி தெரிவித்தியவாறு மாநாட்டில் கலந்து கொண்ட விருந்தினர்களின் நற்தாக்கத்தை ஹுஸூர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள்**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **லண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில் 09 ஆகஸ்ட் 2019** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1398 -ஆம் ஆண்டு **ஸுஹூர்** மாதம் **09 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ- اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ- اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ- صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

கடந்த ஞாயிறு அன்று அல்லாஹ்வின் அருளால் மூன்று நாட்களைக் கொண்ட யூ.கே ஆண்டு மாநாடு நிறைவு பெற்றது. அல்லாஹ்வின் எண்ணற்ற பரக்கத்துகள் இந்த மாநாட்டுடன் இணைந்துள்ளது. அவற்றை நாம் அல்லாஹ்வின் அருளால் பாதுகாப்பவர்களாக இருக்கின்றோம். ஜல்ஸாவிற்குப் பிறகு ஜுமுஆ குத்பாவில் இவ்விஷயங்களை நான் எடுத்துக் கூறுகின்றேன். அல்லாஹ்வின் அருளால் ஜமாஅத் உறுப்பினர்களிடம் தாக்கம் ஏற்படவே செய்கிறது. அந்நியர்களிடம் எவ்விதமான தாக்கத்தை ஏற்படுத்தியது? மாநாட்டின் சூழலை அவர்கள் எவ்வாறு பார்க்கின்றார்கள்? என்பதிலிருந்து புதிய புதிய விஷயங்கள் தெரிய வருகின்றது. இஸ்லாத்தைப் பற்றிய பதிவுகள் அவர்களின் கடிதங்களில் காணப்படுகின்றது.

இவ்வாறான விஷயங்களை நான் பொதுவாக எடுத்துக் கூறி வந்துள்ளேன். இந்த ஜுமுஆவிலும் கூறுவேன். ஆனால் அதற்கு முன்பாக அனைத்து ஆண் தன்னார்வத் தொண்டர்கள், பெண் தன்னார்வத் தொண்டர்களுக்கு நன்றியைக் கூறிக் கொள்கிறேன். அவர்கள் எந்தத் துறையுடன் தொடர்புடையவர்களாக இருந்தாலும் சரி, எந்தத் துறையின் எந்த மட்டத்திலும் தொண்டாற்றியிருந்தாலும் சரி, ஊழியர்கள் முதல் அதிகாரிகள் வரை பெண்கள், குழந்தைகள், இளைஞர்கள், முதியவர்கள் என ஒவ்வொருவரும் மனப்பூர்வமாகத் தங்கள் டயூட்டிகளைப் பார்த்தார்கள்.

மேலும் அந்நிய விருந்தினர்களின் முன்னால் தங்களின் செயலால் இந்த மக்கள் இஸ்லாத்தின் உண்மையான வரைபடத்தை முன் வைத்தார்கள். குறிப்பாகப் பெண் தொண்டர்கள் நன்றிக்குரியவர்கள் ஆவார்கள். அவர்கள் ஒரு பெரிய எண்ணிக்கையில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் விருந்தினர்களை உபசரிப்பதற்காகத் தம்மைத் தாமே முன் வைக்கின்றார்கள். அசல் வேலை என்பது இந்த பெண் தொண்டர்களுடையதாக இருக்கின்றது. அல்லாஹ் இந்த அனைவருக்கும் நற்கூலி வழங்குவானாக.

ஜல்ஸாவின் தன்னார்வத் தொண்டர்கள் மட்டுமின்றி நிரந்தர அலுவலக ஊழியர்கள் இருக்கின்றார்கள். M.T.A ஊழியர்கள் இருக்கின்றார்கள். அவர்களில் தன்னார்வத் தொண்டர்களும் உள்ளனர். யூ.கே –வில் வசிப்பவர்களும் உள்ளனர். பிற நாடுகளிலிருந்தும் வந்தனர். சில டாக்குமெண்டரிகள் வெளியிடப்பட்டது. சில நாட்கள் ஸ்டுடியோவில் பணி செய்தவர்கள் அதனைத் தயார் செய்தனர். இவ்வாறு அனைத்து துறைகளும் மாநாட்டின் நாட்களில் துடிப்பான பணிகளை மேற்கொண்டன.

பிறகு ரிவியூ ஆஃப் ரிலீஜியனின் கண்காட்சி நடக்கின்றது. அதனால் பெரும் தாக்கம் ஏற்படுகின்றது. மேலும் பல கண்காட்சிகள் உள்ளன. புகைப்படக் கண்காட்சி உள்ளது. இந்த அனைத்துத் துறைகளும் பணியாற்றுகின்றன. மாநாட்டிற்கு முன்பும் பின்பும் பணியாற்றிய அனைத்து ஊழியர்களும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த பணியைச் செய்பவர்களாக இருக்கின்றனர். இந்த அடிப்படையில் இந்த மக்கள் நமது நன்றிக்கு உரியவர்களாக இருக்கின்றனர். இப்போது நான் சில மக்களின் நல்ல தாக்கங்களை நேரத்தைக் கவனத்தில் கொண்டு முன் வைப்பேன்.

பெனின் நாட்டைச் சார்ந்த Vice President of Muslim Community –யின் மாலியோ யாகூப் சாஹிப் இம்முறை ஜல்ஸாவில் கலந்து கொண்டார்கள். அவர் கூறுகின்றார்: 20 –க்கும் அதிகமான ஹஜ் செய்துள்ளேன். ஆனால் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் ஜல்ஸாவில் கலந்து கொண்டு அதை விட அதிகமான ஏற்பாடுகளைக் காணும் வாய்ப்பு எனக்கு கிடைத்துள்ளது. ஜல்ஸாவின் சூழல் எப்படிப்பட்டதாக இருந்தது என்றால், நான் இதுபோன்று என் வாழ்நாளில் பார்த்ததே இல்லை. நான் அதிகமான கருத்தரங்கங்கள், இஜ்திமாக்களில் கலந்து கொண்டுள்ளேன்.

ஆனால் ஜல்ஸா ஸாலானா போன்ற சூழல் எங்கும் கிடைக்கவில்லை. விமான நிலையத்திலிருந்து தங்குமிடம் வரை எப்படிப்பட்ட ஏற்பாடு இருந்தது என்றால் வீட்டில் இருப்பதைப் போன்று இருந்தது. பிறகு ஜல்ஸாவில் அனைத்து மட்டத்திலான மக்களையும் பார்த்தேன். இஞ்சினியர், டாக்டர், புரொஃபொஸர், படித்த மக்கள், அறிஞர்கள் போன்றோர் மிகவும் தன்னடக்கத்துடன் எங்களுக்குத் தொண்டாற்றினர். மேலும் இதில் மிகவும் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

பிறகு எனது சொற்பொழிவைப் பற்றி அவர் கூறினார்: இஸ்லாத்தின் சரியான தூதுச்செய்தி இதிலிருந்து கிடைத்தது. மேலும் இஸ்லாமிய உலகிற்கும் முஸ்லிம்களுக்கும் இந்த தூதுச் செய்தியின் அவசியம் உள்ளது. இதனால் இஸ்லாம் தொடர்பான முரண்பாடுகளிலிருந்து விலகிக் கொள்ளலாம்.

அவர் கூறுகின்றார்: நான் இங்கிருந்து நிறைய விஷயங்களைக் கற்றுக் கொண்டேன். அஹ்மதிய்யத்தே உண்மை இஸ்லாம் ஆகும்.

பிறகு கூறுகின்றார்: நான் பெனின் சென்று, பிறர் விஷயங்களுக்கு செவிசாய்க்காதீர்கள். அஹ்மதிய்யத்திடமிருந்து கற்றுக் கொள்ளுங்கள். அஹ்மதிகள் மட்டுமே உலகில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மையான மகத்துவத்தை எடுத்துரைக்கின்றார்கள் என்று கூறுவேன்.

அடுத்து புர்கினோ ஃபாஸோவில் Simeon Sawadogo சாஹிப் மார்க்க விவகார அமைச்சராக இருக்கின்றார்.மேலும் உள்துறை அமைச்சராகவும், உள்ளாட்சித்துறை அமைச்சராகவும் உள்ளார். அவர் தமது தாக்கத்தை இவ்வாறு வெளிப்படுத்தியுள்ளார். மார்க்க விவகார அமைச்சர் என்ற அடிப்படையில் நான் அனைத்து மார்க்கங்களையும் மதிக்கின்றேன். ஜல்ஸாவில் கலந்து கொண்டதால் எனது அதிகமான கேள்விகளுக்குப் பதில் கிடைத்து விட்டது. அது எனக்கு பேருதவியாக இருக்கின்றன.

நான் முதன் முறையாக ஜல்ஸாவில் கலந்து கொண்டுள்ளேன். ஜல்ஸாவின் நினைவுகளும் தூய சூழலும் ஆன்மீக ரீதியில் எனக்கு மிகவும் உதவி புரிந்தன. பரஸ்பர அன்பு, நன்னடத்தைகள் மற்றும் போதனைகளின்படி செயலாற்றியவாறு ஒன்றிணைந்து வாழலாம்.

பிறகு ஜல்ஸாவின் தொண்டர்கள் தொடர்பாகக் கூறுகின்றார்: ஜல்ஸாவில் பணியாற்றிய தன்னார்வத் தொண்டர்கள் கழிவறையைச் சுத்தம் செய்கின்றனர். பாத்திரங்களைக் கழுவுகின்றனர். சிறிய குழந்தைகள் குடிநீர் விநியோகிக்கின்றனர். இவை அனைத்தும் கலப்பற்ற உணர்வின்றி சாத்தியம் கிடையாது. பிறருக்கு தொண்டாற்றும் மனப்பான்மை அசாதாரணமானதாகும்.

பிறகு கூறுகின்றார்: ஃபஸ்ல் பள்ளிவாசலுக்கும் சென்றேன். சிறிய பள்ளிவாசலாகும். வேலைப்பாடுடன் கூடிய மிகவும் கவரக்கூடிய அழகிய பள்ளிவாசலாகும்.

பைஅத் தொடர்பாகக் கூறுகின்றார்: பற்றுதல், அர்ப்பணம் மற்றும் கட்டுப்படுதலின் ஒரு சங்கிலியான அது உலகிற்குப் பாடமாகும். மக்கள் கலீஃபாவின் குரலைப் புரிந்து கொள்ளவில்லை. இன்றைய உலகம் பௌதீகத்தின் பின்னால் ஓடுகின்றது. ஆனால் இந்த பௌதீக வழிபடுதலின் நஷ்டமும் மனிதனுக்கே ஏற்படுகின்றது.

பிறகு என்னைக் குறித்து கூறினார்: சிறந்த சமூகத்தை அமைப்பதற்கான செயல் திட்டத்தை வழங்கினீர்கள். பெற்றோருக்கான உரிமைகள், குழந்தைகளுக்கான உரிமைகள் போன்ற இவைகளை உங்களின் சொற்பொழிவில் கூறினீர்கள். இவற்றிலிருந்து மிகுதியான மக்கள் தாக்கத்திற்கு உள்ளானார்கள். அதிகமானவர்கள் எழுதியும் உள்ளனர்.

புர்கினோ ஃபாஸோவிலிருந்து Sayouba Quedraogo சாஹிப் M.P கூறுகிறார்: ஜல்ஸா மிகவும் நன்றாக இருந்தது. அனைத்து வேலைகளும் அமைப்பாகவும் திட்டமிடுதலுடனும் நடைபெற்றது. முழு உலகிலிருந்து வருகை தந்திருந்த ஆண்களும் பெண்களும் இஸ்லாத்திற்காக அனைத்து வித சேவைக்காகவும் ஆயத்தமாக இருந்தனர். இன்று இஸ்லாம் அஹ்மதிய்யத்தின் மூலமாக பரவுவதாக நான் நினைக்கிறேன். அஹ்மதிகள் ஒருவர் மற்றவருக்கு உதவி புரிந்தவாறு பிறரின் உதவிக்காக ஆயத்தமாக இருக்கின்றனர்.

பிறகு இவர் என் தொடர்பாகக் கூறினார்: தாங்கள் எங்களின் ஆட்சியாளர்களுக்காக, அமைதி நிலைபெற துஆ செய்தீர்கள். இது எங்களுக்கு அளப்பெரும் ஒன்றாகும். ஜல்ஸாவின்போது எங்களுக்கு சிறந்த முறையில் வரவேற்பு அளிக்கப்பட்டது. மற்ற சொற்பொழிவுகளும் மிகவும் உயர்ந்ததாக இருந்தன.

அடுத்து யூனானிலிருந்து Chief Rabbi of Athens சாஹிப் வந்திருந்தார். அவர் கூறுகின்றார்: எனக்கு இந்த அசாதாரணமான சர்வ சமய மாநாட்டில் பங்கேற்பதற்கான பாக்கியம் கிடைத்ததற்காக நான் முதலில் இறைவனுக்கு நன்றி செலுத்திக் கொள்கிறேன். ஜல்ஸாவின் சூழல் ஏற்பாட்டாளர்கள் மற்றும் பங்கேற்பாளர்கள் இரண்டிற்கும் வித்தியாசமில்லாமல் பணி செய்தனர். எல்லா விதத்திலும் அஹ்மதிய்யா ஜமாஅத் ஒப்பற்றதாகவும் பிறருக்கு பாடமாகவும் திகழ்கிறது. மேலும் இங்கு பிற மார்க்கங்கள் மற்றும் கொள்கைகளை ஏற்று மதிக்கப்படுவதை உணர்ந்தேன்.

பிறகு கூறுகின்றார்: எவர்களை சந்தித்துப் பேசுவதற்கான வாய்ப்பு கிடைத்ததோ அவர்கள் அனைவரும் உளப்பூர்வமாக கண்ணியமளித்துக் கௌரவித்தார்கள்.

பிறகு கூறுகின்றார்: உண்மையிலேயே நான் மகிழ்ச்சி அடைந்தேன். நான் எனது குறிப்பான தொப்பியை தலையில் அணிந்து கொண்டு எந்தவித அச்சமூட்டும் மிரட்டலான பார்வையுமின்றி நவூதுபில்லாஹ் கடும் எதிர் நடவடிக்கையுமின்றி ஆயிரக்கணக்கான முஸ்லிம் சகோதரர்கள் மத்தியில் சுற்றித் திரிந்தேன். இது எனக்கு பிற இடங்களில் காணக் கிடைக்காத முற்றிலும் எதிரான ஒன்றாகும்.

பிறகு கூறுகின்றார்: எல்லா விதத்திலும் நான் கவனிக்கப்பட்டேன். எனது உணவுகள் கூட எனக்கேற்றவாறு தயார் செய்யப்பட்டிருந்தது. தொழுகை மற்றும் எனது வணக்கங்களில் எனக்காக அட்ஜஸ்ட் செய்யப்பட்டது. மேலும் இது ஒரு சாதாரண வேலையல்ல. ஜல்ஸாவின் ஏற்பாட்டாளர்கள் எனக்காக இவை அனைத்தையும் செய்தனர்.

அடுத்து ஜப்பானிலிருந்து புத்த மத மகாமத்தின் Yoshida Nichiko ஜல்ஸாவிற்கு வந்திருந்தார். இவரைப் பொருத்த வரையில் பீஜிங் மன்னரின் தாயார் இவரது அன்பிற்குரிய சீடராவார். டோக்கியோவில் இவரது மகாமத்தில் பீஜிங் மன்னரின் தாயாரது அஸ்தியின் சமாதி உள்ளது. இவர் கூறுகின்றார்: ஜல்ஸாவின் சூழலைப் பார்க்கும்போது உள்ளத்திற்கு உண்மையான அமைதி கிடைக்கின்றது. அனைவரின் பாதுகாப்பிற்கும் சோதனை நடக்கத்தான் செய்கின்றது. ஆனால் எந்த சண்டையையும் பார்க்கவில்லை. எவரையும் ஆவேசமாகப் பார்க்கவில்லை. உணவு முதல் சொற்பொழிவுகள் வரை அனைத்து நிகழ்ச்சிகளும் அசாதாரணமான ஏற்பாடாக இருந்தது.

பிறகு மார்க்கம் தொடர்பான சொற்பொழிவு பற்றி கூறுகின்றார்: நேரத்திற்கு ஏற்றதாக உணர்ந்தேன். மேலும் மார்க்கத்தின் உயர்ந்த நல்லொழுக்கப் போதனைகளின் உதவியினால் நாம் ஒருவர் மற்றவரின் உரிமையைச் செலுத்த முடியும் என்பதை இன்று உலகிற்கு உணர்த்த வேண்டிய தேவை உள்ளது.

பிறகு கூறுகின்றார்: ஜப்பானிய சமுதாயமும் பெற்றோர் மற்றும் குழந்தைகளுக்கு இடையேயான இடைவெளியால் திகைத்து நிற்கின்றது. எல்லா விதமான முயற்சிகளுக்குப் பிறகும் எங்களால் இந்த அலையை எதிர்கொள்ள முடியவில்லை.

அவர் கூறுகின்றார்: தங்களின் அணுகுமுறையை எங்களின் சமுதாயத்திலும் பயன்படுத்தி பயனடைய முடியும். நானும் பயனடைய முயற்சி செய்வேன்.

அவர் கூறுகின்றார்: இஸ்லாத்தைப் பற்றி முன்பு கூட முழுமையான பார்வை எனக்கு இருக்கவில்லை. ஆனால் ஜல்ஸாவின் சூழலைப் பார்த்து பைஅத் நிகழ்ச்சி வந்தபோது என்னால் இருக்க முடியவில்லை. உலகில் அமைதியை நிலைநாட்டவும், அன்பு மன்னிப்பை உள்ளடக்கிய சமுதாய ஒற்றுமைக்காகவும் எனக்கு எனது கையைத் தங்களின் கையில் கொடுத்து விட வேண்டும் என முடிவு செய்தேன். எனவே நானும் பைஅத்தில் பங்கு பெற்று விட்டேன். நான் தங்களின் தலைமைத்துவத்தை ஏற்கிறேன். உலகின் அமைதிக்காகச் செய்யப்படும் முயற்சிகளில் தங்களின் உதவியாளனாக இருப்பேன் என்று உறுதி கூறுகின்றேன்.

இவர் பைஅத் செய்து விட்டார் என்று இதன் பொருளல்ல. மாறாக, உலகில் அமைதியை நிலைநாட்டுவதற்கான அந்த குறிக்கோளிற்காக அவர், நான் தங்களுக்கு எல்லா வகையிலும் உடன் நிற்பேன் என்று அவர் கூறுகின்றார்.

அர்ஜெண்டைன்ஸைச் சார்ந்த பெண்மணி Judith சாஹிபா. இவரது கணவர் பத்து மாதங்களுக்கு முன்பு அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டு விட்டார். இவர் கிறித்தவராக இருக்கின்றார். இவர் கூறுகின்றார்: எனது தொழிலைப் பொருத்தவரையில் நான் வக்கீல் ஆவேன். ஜல்ஸாவின் சொற்பொழிவுகளில் எனக்கு மிகவும் பிடித்தமான சொற்பொழிவு ஜமாஅத்தின் இமாம் அவர்களின் நிறைவுரை ஆகும். அவர் எனது நிறைவு சொற்பொழிவு பற்றி கூறுகின்றார்:

அதில் தாங்கள் மிகவும் விரிவாகவும் அழகிய முறையிலும் இஸ்லாமிய போதனைகளின் மூலமாக நிலைபெறும் மனித உரிமைகளை விளக்கினீர்கள். ஜல்ஸாவில் கலந்து கொள்வதற்கு முன்பு நான் சிறிது சங்கடத்திற்குள்ளாகி இருந்தேன். மேலும் சில ஐயங்களும் இருந்தன. இந்த அளவிற்கு பெரிய எண்ணிக்கையில் மக்கள் ஒன்று கூடும்போது நிச்சயமாக விரும்பத்தகாதவையும் சண்டைகளும் ஏற்படும் என்பது எனது எண்ணமாகும். ஆனால் நீங்கள் ஒன்று கூடுவது என்பது எங்கள் மக்கள் ஒன்று கூடுவதிலிருந்து முற்றிலும் வேறாக இருந்தது. மக்கள் கூட்டம் இந்த அளவிற்கு பெரிய எண்ணிக்கையில் இருந்தும் கூட எல்லா நேரமும் அன்பும் பரிவும் அமைதி நிறைந்த சூழலுமாகவே இருந்தது. மக்களின் முகங்களில் நிரந்தர புன்சிரிப்பு இருந்தது.

பிறகு இவர் கூறுகின்றார்: ஜல்ஸாவில் கலந்து கொள்வதற்கு இஸ்லாமிய பர்தா அணிய வேண்டும் என்று நிர்பந்தப்படுத்தி விடுவார்களோ அழுத்தம் கொடுப்பார்களோ என்ற இந்த கவலையும் இருந்தது. ஆனால் தொடக்கம் முதல் இறுதி வரை உங்கள் மத்தியில் இஸ்லாமிய பர்தா இன்றி மிகவும் சௌகரியத்தை உணர்ந்தேன். மேலும் தங்களின் பெண்கள் மற்றும் ஆண்கள் என்னிடம் மிகவும் கண்ணியமாக நடந்து கொண்டனர். மாறாக, நீங்கள் பிறரை விட என்னை அதிகமாகக் கவனிக்கின்றீர்கள் என்று எனக்கு தோன்றியது.

லைபீரியாவின் தபால் மற்றும் தொலைத்தொடர்புத் துறை அமைச்சர் Kopper W. Kruah சாஹிப் கலந்து கொண்டார். அவர் கூறுகின்றார்: ஜல்ஸாவின் பல்வேறு நிகழ்ச்சிகளின் ஏற்பாடு எந்த அளவுக்கு அழகிய முறையில் செய்யப்பட்டுள்ளது என்றால் இதில் எனக்கு எவ்வித குறைபாடும் காணக் கிடைக்கவில்லை. எதுவரையென்றால் ஜல்ஸாவின் பல பகுதிகள் அதாவது மக்கள் தொடர்பு முதல் சமையலறை வரை ஒன்று மற்றொன்றுடன் இணைந்திருந்தது.

எல்லாவற்றையும் விட மேலாக அனைத்து ஏற்பாடுகளையும் தன்னார்வத் தொண்டர்களின் குழு செய்தது என்பதாகும். அவர்கள் அசாதாரணமான சூழலில் ஒருவர் மற்றவருடன் இணைந்து பணியாற்றினார்கள். நான் எனது வாழ்நாளில் இதற்கு முன்பு தனது டியூட்டியுடன் இந்த தன்னார்வத் தொண்டர்களின் பங்களிப்பைப் போன்று பார்த்ததில்லை. ஜல்ஸாவின் நிகழ்ச்சிகளின் நடுவே ஜல்ஸாவில் கலந்து கொண்டுள்ளவர்கள் ஒருவர் மற்றவருக்காக கண்ணியம் பரிவு நிறைந்த உணர்வுகளைக் காண முடிந்தது. **39** ஆயிரத்திற்கும் அதிகமான மக்களுக்காக இவ்வளவு பரந்த ஏற்பாட்டை பரந்த அளவில் எவ்வித கூச்சலுமின்றி அனைத்து ஏற்பாடுகளையும் முறைப்படுத்துவது என்பது குறைந்தபட்சம் எனக்கு வியப்பூட்டும் விஷயமாகும்.

அடுத்து ஐரோப்பாவிலிருந்து வந்திருந்த ஒரு பெண்மணி. இவர் University –ல் Oriental study –ன் பேராசிரியராக உள்ளார். இவர் கூறுகின்றார்: நான் **30** ஆண்டுகளுக்கும் அதிகமாக இஸ்லாமிய நாடுகளின் அமைப்புகளைப் படித்து ஆய்வு செய்து வருகிறேன். தங்களின் ஜல்ஸாவில் கலந்து கொண்டு, வேறு எங்கும் காண முடியாத இரண்டு தனித்துவம் வாய்ந்த விஷயங்களைப் பார்த்தேன். முதல் விஷயம், ஜமாஅத்தின் கட்டுப்படுதல். ஒரு தலைவரின் கீழ் ஒன்றுபடுவதை வேறு எங்கும் காணவில்லை. முரப்பிமார்கள் முதல், ஜல்ஸாவில் டியூட்டி கொடுக்கும் தன்னார்வத் தொண்டர்கள் வரை உணவு பரிமாறுபவர்களாக இருந்தாலும் சரி, வாகனங்களை ஓட்டும் ஓட்டுநராக இருந்தாலும் சரி, ஒவ்வொருவரும் தங்களின் கலீஃபாவுடன் அசாதாரணமான தொடர்பு வைத்திருப்பதில் ஒன்றுபோல் உள்ளனர்.

எனவே, இது எப்படிப்பட்ட அளவுகோல் என்றால் இது நமது நண்பர்களுக்கும் காணக் கிடைக்கின்றது. எதிரிகளுக்கும் காணக் கிடைக்கின்றது. எனவேதான் எதிரிகள் குழப்பம் விளைவிக்க முயல்கின்றனர். இந்தப் பொருளைத்தான் இன்று நாம் செயல் மூலமாகவும் துஆ மூலமாகவும் பாதுகாக்க வேண்டியுள்ளது.

பிறகு கூறுகின்றார்: இரண்டாவது விஷயம், ஜமாஅத்தில் எவ்வித ஏற்றத்தாழ்வும் காணப்படுவதில்லை. பழைய அஹ்மதியானாலும் சரி, அல்லது புதிய அஹ்மதியானாலும் சரி, அரேபியராயினும் சரி, அரேபியர் அல்லாதவராயினும் சரி, பாகிஸ்தானியராயினும் சரி, பாகிஸ்தானியர் அல்லாதவராயினும் சரி, தங்களின் ஜமாஅத் அமைப்பு எல்லா வித ஏற்றத்தாழ்வு மற்றும் சமூக பாகுபாடுகளிலிருந்து தூய்மையானதாகத் தெரிகின்றது.

இதுவே அந்த சிறப்புகளாகும். இவற்றை வெளிப்படையாக சில நாட்களுக்கு மட்டும் நாம் காட்டுபவர்களாக இருக்கக் கூடாது. மாறாக, எப்போதும் நமக்குள் இருக்க வேண்டும். இதுவே அந்த இறுதி தூதுச் செய்தியாகும். இதனை நமக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வழங்கியுள்ளார்கள். எந்தவொரு வெள்ளையருக்கும் கருப்பர் மீதும் கருப்பருக்கு வெள்ளையர் மீதும் அரேபியருக்கு ஆப்பிரிக்கர் மீதும் ஆப்பிரிக்கருக்கு அரேபியர் மீதும் எந்த உயர்வும் இல்லை. ஒரு மனிதன் என்ற அடிப்படையில் அனைவரும் சரி சமமானவராவோம்.

அடுத்து மராக்கஸின் ஒரு நண்பர் தத்துவவியல் பேராசிரியர் ஆவார். அவர் கூறுகின்றார்: ஜல்ஸாவில் நாங்கள் மிகவும் நல்ல தாக்கத்திற்கு உள்ளானோம். இது ஜமாஅத்தை மிகவும் அருகிலிருந்து காண்பதற்கான மிக நல்ல வாய்ப்பாகும். நாங்கள் இந்த ஆண்டு இஜ்திமாவில் ஜமாஅத்தின் மிக உறுதியான அமைப்பு, விநியோக செயல்பாடு மற்றும் விருந்தினர்களுக்கு சிறந்த விருந்தோம்பலைக் கண்டோம். இவ்வாறு அஹ்மதிய்யா ஜமாஅத்தின் உயர் நல்லொழுக்கத்தைப் பற்றி தெரிய வந்தது. அது இஸ்லாம் மற்றும் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் போதனைகளின் பிரதிபிம்பமாகும். இந்த ஜல்ஸாவின் மூலமாக எதிரிகளின் பிரச்சாரத்தின் பொய்யும் எங்கள் மீது திறந்து விட்டது. இந்த மக்கள்

இந்த இறை ஜமாஅத்தின் மீது பொறாமை மற்றும் எதிர்ப்பைக் கொண்டுள்ளனர். அல்லாஹ் தங்களுக்கு மனித இனத்திற்கு தொண்டாற்றும் வாய்ப்பை வழங்கிக் கொண்டே செல்வானாக.

அடுத்து கினிகனாகிரியிலிருந்து அல்ஹாஜ் முஹம்மது வக்கீல் யதாரா சாஹிப். மார்க்க விவகாரங்களின் இன்ஸ்பெக்டர் ஜெனரலாக இருக்கின்றார். அவர் கூறுகின்றார்: ஜல்ஸாவின் இந்த மூன்று நாட்களில் எந்தப் பொருள் என்னை மிகவும் தாக்கத்திற்குள்ளாக்கியது என்றால், அஹ்மதிகளின் தர்பிய்யத் குறிப்பான இஸ்லாமிய போதனைகளின் அடிப்படையில் செய்யப்பட்டுள்ளது. மேலும் அனைத்து அஹ்மதிகளும் ஓரிடத்தில் ஒன்று கூடினர். அது இஸ்லாமிய சகோதரத்துவத்தின் உயர்வான முன்னுதாரணமாகத் தோன்றியது.

ஒரே தாயின் பிள்ளைகள் ஒரே வீட்டிலிருந்து வருகின்றார்கள். அசாதாரணமான ஒழுங்கு, தன்னார்வத் தொண்டர்களின் சிரித்த முகம், ஜல்ஸா திடலுக்கு எவருக்கும் இடைஞ்சல் ஏற்படுத்தாமல் வருவது செல்வது, இவர்கள் ஒரு வானத்தின் படைப்பைப் போன்று தோன்றியது. இவை எல்லாவற்றையும் பார்த்து இன்று ஒரு ஜமாஅத் இஸ்லாத்தின் சான்றாக ஆக முடியும் என்றால் அது அஹ்மதிய்யா ஜமாஅத்தே ஆகும் என்று தோன்றியது.

அவர் கூறுகின்றார்: எனக்கு பிற இஸ்லாமிய நாடுகள் மட்டுமின்றி சவூதி அரேபியாவிற்கும் எண்ணிலடங்கா முறை செல்வதற்கான சந்தர்ப்பம் ஏற்பட்டது. ஆனால் நான் பார்த்துக் கொண்டிருக்கும் இந்த சூழல், இறைவன் மீது சத்தியமாகக் கூறுகிறேன். எனக்கு இப்படிப்பட்ட இஸ்லாமிய சகோதரத்துவம் நிறைந்த சுற்றுச்சூழல் எனக்கு எங்கும் தென்படவில்லை. ஏறக்குறைய 40 ஆயிரம் மக்களை ஓரிடத்தில் ஒன்று கூட்டுவது, பிறகு தொடர்ச்சியாக இஸ்லாமிய போதனைகளைப் போதிப்பது, எவ்வித சண்டை, தள்ளும் முள்ளும் இன்றி அல்லாஹ், அவரது ரஸூலின் அன்பில் கழிப்பது அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கே உரிய தனித்துவமாகும் என்பதைக் கூற எனக்கு சிறிதும் தயக்கம் இல்லை.

அடுத்து Fanta Fofan Oumar சாஹிபா என்ற பெண்மணி கினிகனாகரி கஸ்டன் ஏர்ப்போர்ட்டில் லெப்டினல் ஜெனரலாக இருக்கின்றார். இவர் பைஅத்தும் செய்துள்ளார். புதிய அஹ்மதியாவார். இவர் கூறுகின்றார்:

நான் அஹ்மதிய்யாக ஆகி விட்டேன். ஆனால் உள்ளத்தில் என்னிடம் ஏதேனும் தவறான முடிவு வெளிப்பட்டு விடவில்லையே என்ற அச்சம் இருந்தது. ஏனென்றால் கினியில் ஜமாஅத்தின் எதிர்ப்பு மற்றும் ஜமாஅத்தின் எதிர்ப்புப் பிராச்சாரத்தைப் பார்த்து சில வேளைகளில் சங்கடத்திற்கு உள்ளாகியுள்ளேன். ஆனால் யூ.கே ஜல்ஸா ஸாலானாவில் பங்கு பெற்றிருக்கிறேன். இன்று நான் இறைவன் மீது ஆணையிட்டுக் கூறுகின்றேன். எனது எல்லா சந்தேகங்களும் விலகி விட்டன. ஜல்ஸாவில் கலந்து கொண்டதால் எனக்கு உறுதி ஏற்பட்டு விட்டது. உலகில் இன்று ஏதேனும் ஜமாஅத் இஸ்லாத்தின் பிரதிநிதியாக விளங்க முடியும் என்றால் அது அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் மட்டுமே ஆகும்.

அவர் கூறுகின்றார்: எனக்கு ஜல்ஸாவின் வீடியோ கிடைத்தால் பிறகு நான் எனது முழு குடும்பத்தினருக்கும் இந்த சத்தியம் மற்றும் உண்மையை உணர்த்த எண்ணியுள்ளேன். இறுதியாக அல்லாஹ் எனது முழு குடும்பத்தையும் அஹ்மதிய்யத் மற்றும் உண்மை இஸ்லாத்தில் உயிர் மற்றும் உளப்பூர்வமாக நுழையும் வாய்ப்பை வழங்க துஆவிற்காக விண்ணப்பித்துக் கொள்கின்றேன்.

அடுத்து பெனினில் கவுன்சிலர் ஜெனரலாக இருக்கும் சாந்தன் மாலா ஃபிதாலி கூறுகின்றார்: இதற்கு முன்பு 50 –வது ஆண்டு மாநாட்டில் கலந்து கொண்டுள்ளேன். இப்போது நான் 53 –வது ஆண்டு மாநாட்டில் மிகுந்த மகிழ்ச்சி மற்றும் உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றியுணர்வுடன் கலந்து கொண்டுள்ளேன். முன்பும் ஆன்மீக சூழலை உணர்ந்தேன். அதே ஆன்மீக சூழலும் அனைவருக்குமான உணர்வும் இன்றும் உள்ளது. அனைத்து சிறியவர்கள், பெரியவர்கள், முதியவர்கள், இளைஞர்கள், பெண்கள் அன்புடன் நடந்து கொள்கின்றனர். ஏற்பாட்டைப் பொருத்தவரையில் என்னிடம் வார்த்தையே இல்லை.

அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தன்னார்வத் தொண்டவர்களின் அமைப்பிற்கு தனக்குத் தானே உதாரணமாகத் திகழ்கின்றது. அனைத்துப் பொருளும் அது எங்கு இருக்க வேண்டுமோ அங்கு தனக்குரிய இடத்தில் இருந்தது. ஒவ்வொரு பொருளும் உயர் தரத்துடன் இருந்தது. ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு தன்னார்வத் தொண்டரிடமும் பணிவு இருந்தது. தொண்டுணர்வுடன் திகழ்ந்தார்கள். எல்லா வித தொண்டிற்கும் ஆஜராகினர்.

நான் என்னையும் இந்த சூழலின் அங்கமாக உணரத் தொடங்கினேன். எந்தத் தனிமையையும் உணரவில்லை. சொற்பொழிவுகளும் மிகவும் சிறப்பாகவும் போதனைகளால் நிரம்பியும் இருந்தன. விருந்தோம்பல் மிகவும் சிறப்பாக இருந்தது. கண்காட்சி மிகவும் உயர்வானதாக இருந்தது. அஹ்மதிய்யா ஜமாஅத்தின் வரலாற்றை சிறந்த முறையில் புரிந்து கொள்ள மிகவும் பயனுள்ளதாகும். அதிகமான தகவல்கள் கண்காட்சியில் இருந்தன. பிறகு ஜமாஅத்தின் கித்மத்தே கல்க் உள்ளது. அவற்றை அறிந்து கொள்வதற்கான வாய்ப்பு கிடைத்தது.

பெனினிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினரும் நிதி ஆணையத்தின் தலைவருமாகிய Comlan Patrice சாஹிப் கூறுகின்றார்: முதன் முறையாக அஹ்மதிய்யா ஜமாஅத்தின் ஜல்ஸாவில் கலந்து கொண்டேன். மிகவும் தாக்கம் ஏற்பட்டது. நான் பெனினிலிருந்து ஜல்ஸாவிற்காக பயணத்தைத் தொடங்கியபோது முற்றிலும் வேறு காட்சியாக இருந்தது. இவ்வளவு பெரிய மகத்தான ஜல்ஸாவில் கலந்து கொள்ளப் போகிறேன்.

இந்த ஜல்ஸாவில் அனைத்து மட்டத்திலான அனைத்து தகுதியுடைய மக்களும் கலந்து கொண்டனர். ஆனால் அவ்வாறிருந்தும் நான் எவரது முகத்திலும் மகிழ்ச்சியின்மையின் அறிகுறிகளைக் காணவில்லை. நான் மிகவும் கவனிக்கப்பட்டேன். விமான நிலையத்தில் இறங்கியதிலிருந்து விருந்தினர் வரவேற்பு வரை சிறியவர் முதல் பெரியவர் வரை ஒவ்வொருவரும் பெரும்

**திருக்குர்ஆனிலிருந்து...**

அல்லாஹ்விற்கு நல்ல கடனை வழங்குபவர் யார்? அதன் காரணமாக அவன் அதனை அவருக்குப் பெருமளவில் பன்மடங்காகப் பெருக்குவான். அல்லாஹ் (அடியானின் பொருளைப்) பெற்றுக் கொண்டு, பெருகச் செய்கிறான். நீங்கள் அவனிடமே திரும்பவும் கொண்டு செல்லப்படுவீர்கள். (2:246)

A.Nasir Ahmad
அமீர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், மேலப்பாளையம்

**திருக்குர்ஆனிலிருந்து...**

நம்பிக்கை கொண்டவர்களே! எவ்வித கொடுக்கல் வாங்கலும் நட்பும் பரிந்துரையும் இல்லாத அந்நாள் வருவதற்கு முன்னர், நாம் உங்களுக்கு வழங்கியதிலிருந்து செலவு செய்யுங்கள். நிராகரிப்பவர்கள் (தங்களுக்கே) அநீதியிழைப்பவர்களாவர். (2:255)

A.Shamsul Alam
காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, மேலப்பாளையம்

தொண்டாற்றினர். அனைவரும் தமது ஓய்வைக் கை விட்டு விட்டு விருந்தினர்களின் தொண்டிற்காகத் தம்மைத் தாமே அர்ப்பணித்து விட்டதைப் போன்று தோன்றியது.

பிறகு கூறுகின்றார்: பல்வேறு கலாச்சாரம் பல்வேறு மொழியைக் கொண்ட பல்வேறு நிற கோத்திரத்தைக் கொண்ட அனைவருக்கும் போலீஸ் மற்றும் இராணுவம் இன்றி எவ்வாறு ஒழுக்கமாகவும் கூச்சல் குழப்பமின்றிச் சண்டை சச்சரவு இன்றி ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. பிறகு நான் இது எவ்வாறு சாத்தியம் என்று சிந்தித்தேன். பலதரப்பட்ட மக்கள் இருக்கின்றார்கள். இவ்வளவு எண்ணிக்கையில் இருந்தும் எந்த சண்டையும் இல்லை.

அவர் கூறுகின்றார்: நான் சிந்தித்தன் விளைவு இதுவாகும். அதாவது சந்தேகத்திற்கிடமின்றி இது உங்களின் கடின உழைப்பு மற்றும் அஹ்மதிய்யா ஜமாஅத்துடன் இறை உதவி இருப்பதால்தான் இது சாத்தியமாகியுள்ளது. அதனால்தான் இவை அனைத்தையும் பார்க்க முடிகின்றது.

பிறகு எனது சொற்பொழிவுகள் தொடர்பாக கூறுகின்றார்: உலக அமைதிக்கு இது மிகவும் அவசியமாகும். பிறகு கண்காட்சி மிகவும் நன்றாக இருந்தது. அதில் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் வரலாறு கூறப்பட்டிருந்தது. அஹ்மதிய்யத்தின் உயிர்த் தியாகிகளின் சம்பவங்களைக் கேட்டு எனக்கு மன வேதனை ஏற்பட்டது. எனக்கு அதிகமாக தெரிந்து கொள்ள முடிந்தது.

கிபோனின் முன்னாள் பிரதமரும் நாடாளுமற்ற உறுப்பினருமாகிய பால் பியூகே சாஹிப் ஜல்ஸாவில் கலந்து கொண்டார். அவர் கூறுகின்றார்: நூற்றுக்கும் அதிகமான நாடுகளிலிருந்து மக்கள் ஆயிரக்கணக்கான எண்ணிக்கையில் கலந்து கொண்டுள்ளது எனக்கு ஒரு தனித்துவம் வாய்ந்த அனுபவமாக இருந்தது. அவர்கள் அனைவரையும் கவனித்துக் கொள்ளத் தன்னார்வத் தொண்டர்களின் ஒரு பெரிய எண்ணிக்கை இரவு பகலாக வேலை செய்தது.

ஒவ்வொருவரும் ஒருவர் மற்றவருக்கு தொண்டாற்ற சிறியவர், பெரியவர், முதியவர், குழந்தைகள், பெண்கள் எப்போதும் ஆயத்தமாக இருந்தனர். விரும்பத்தகாத நிகழ்வுகள் எதுவும் நடைபெறவில்லை. ஜல்ஸாவின் நடுவே முன் வைக்கப்பட்ட சொற்பொழிவுகளால் எனக்கு இஸ்லாம் மற்றும் குறிப்பாக அஹ்மதிய்யத்தைப் பற்றி அதிகமாகத் தெரிந்து கொள்ளும் வாய்ப்பு கிடைத்தது. எங்களது கிபூன் நாட்டில் அஹ்மதிய்யத் இப்போது புதிதாகும். நான் அஹ்மதிய்யத்தையும் மற்ற முஸ்லிம்களைப் போன்று நினைத்திருந்தேன்.

ஆனால் எனக்கு ஜல்ஸாவில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்ட போது இந்த மக்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதை நான் நேரடியாகச் சென்று பார்க்க வேண்டும் என்று நினைத்தேன். அஹ்மதிய்யத்தின் இஸ்லாம், நாம் டி.வி –யில் பார்ப்பதைப் போன்று உலகின் அமைதியை நாசமாகிக் கொண்டிருப்பதைப் போன்றதா? ஆனால் நான் இங்கு வந்து உங்கள் பணிகளால் மிகவும் தாக்கத்திற்கு உள்ளானேன். நீங்கள் கடினமாக உழைக்கும் மக்களாவீர்கள். உங்கள் இஸ்லாம் உண்மை இஸ்லாம் ஆகும். இன்று உலகிற்கு இதன் தேவை உள்ளது. எனது நாட்டிற்கும் இதே இஸ்லாத்தின் தேவை உள்ளது.

அடுத்து கீபோனிலிருந்தே வெளியுறவு அமைச்சகத்தின் கேபினட் இயக்குனராகிய Pacide Olouba Odounga சாஹிப் கூறுகின்றார்: ஜல்ஸாவின் சூழல் மிகவும் சிறப்பானதாக இருந்தது. பெரும் ஆன்மீக சூழலைக் கொண்டிருந்தது. அதனை ஒருபோதும் மறக்க முடியாது. ஜல்ஸாவின் ஏற்பாட்டினால் பெரும் தாக்கத்திற்குள்ளானேன். ஒரு சங்கிலியைப் போன்று சிறியவரும் பெரியவரும் இணைந்திருந்து பணியாற்றினர்.

பிறகு கூறுகின்றார்: அஹ்மதிய்யா ஜமாஅத்தின் ஜல்ஸாவில் கலந்து கொண்டது, எனக்கு திருக்குர்அன் மற்றும் பைபிளில் கூறப்பட்டுள்ள போதனைகளின் செயல் மாதிரியைக் காணும் வாய்ப்பு கிடைத்தது. அனைவரும் ஒரே குடும்பத்தைப் போன்று இருந்து வந்தனர்.

இதைப்போன்று பிறகு அவர், எனது சொற்பொழிவு பற்றி கூறியுள்ளார். அவர் கூறுகின்றார்: என்னை அவர்கள் மிகவும் தாக்கத்திற்குள்ளாக்கினார்கள். ஜல்ஸாவில் கலந்து கொண்டதால் எனக்கு நிறைய கற்றுக் கொள்ளும் வாய்ப்பு கிடைத்தது. இஸ்லாம் பற்றி நிறைய அறிந்து கொள்வதற்கும் புரிந்து கொள்வதற்கும் வாய்ப்புக் கிடைத்தது. நான் முஸ்லிம் கிடையாது. ஆனால் நான் இப்போது என்னையே முஸ்லிமாக உணர்கின்றேன். இதைப் போன்று எனக்கு ஜல்ஸாவின் போது பல்வேறு கண்காட்சிகள் மற்றும் அரங்குகளைக் காணும் வாய்ப்பு கிடைத்தது. அவற்றால் எனது அறிவு அதிகரித்தது.

அடுத்து ஒரு விருந்தினர், மத்திய சுதந்திர ஆப்பிரிக்காவின் அதிபரது ஆலோசகர் ஹீரி அலீங்கோஸா சாஹிப். இவர் கூறுகின்றார்: ஏற்பாடுகள் மிக உன்னதமாக இருந்தன. ஜல்ஸாவின் போது அஹ்மதிய்யா ஜமாஅத்தின் சிறுவர்கள், இளைஞர்கள், முதியவர்களை உள்ளடக்கிய தன்னார்வத் தொண்டர்களின் அனைத்துப் பிரிவும் உயிருள்ளதாக விளங்கியது. அந்த மக்கள் ஒரு கலீஃபாவிற்குக் கட்டுப்பட்டவாறு தங்களின் சிறந்த ஏற்பாடுகளுக்கான சான்றை வழங்கினார்கள். உலகில் சகோதரத்துவம் நிலைபெற வேண்டும் என்பது அஹ்மதிய்யா ஜமாஅத்தின் குறிக்கோளாகும். இந்தப் பணிக்காக அவர்கள் இரவு பகலாக உழைக்கின்றனர். ஆனால் உலகின் பிற அமைப்புகளில் இந்த உயர் நல்லொழுக்கத்தின் குறைபாடு உள்ளது.

பிறகு கூறுகின்றார்: நீங்கள் முன் வைத்த இஸ்லாமிய போதனைகள் உள்ளத்தில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய உயர்தர போதனைகளாகும். இந்த போதனைகளும் அன்பும் மக்கள் அஹ்மதிய்யா ஜமாஅத் தொடர்பாக கூறக் கூடியவற்றிற்கு முற்றிலும் மாறுபட்டதாகும். விளங்கிக் கொள்ளாமலும் அறிவு குறைவின் காரணமாகவும் அஹ்மதிய்யா ஜமாஅத் தொடர்பாக எதிர்த்து வருகின்றனர். இந்த சந்தர்ப்பத்தில் நான் என் சார்பாகவும் எனது

**திருக்குர்ஆனிலிருந்து...**

தங்கள் செல்வத்தை இறை வழியில் செலவிடுகின்றவருக்கு ஒரு தானியம் உதாரணமாகும். அத்தானியம் ஏழு கதிர்களை முளைப்பிக்கும். ஒவ்வொரு கதிரிலும் நூறு தானியங்கள் இருக்கும். தான் நாடியவருக்கு அல்லாஹ் அதிக(மதிக)மாகக் கொடுக்கின்றான். அல்லாஹ் தாராளமாகக் கொடுப்பவனும், மிக்க அறிபவனுமாவான். (2:262)

M.Sabahul Islam & Mohaideen Ali (Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

அல்லாஹ் நம்பிக்கை கொண்டவர்களுக்கு நண்பனாவான். அவன் அவர்களை இருள்களிலிருந்து வெளியேற்றி ஒளியிடத்து கொண்டு செல்கிறான். நிராகரிப்பவர்களின் நண்பர்கள், நன்மையைச் செய்யவிடாது தடுப்பவர்களாவர். இவர்கள் அவர்களை ஒளியிலிருந்து வெளியேற்றி இருள்களிடத்துக் கொண்டு செல்வார்கள். அவர்கள் நெருப்பிற்குரியவர்கள். அவர்கள் அதிலேயே நெடுங்காலம் இருப்பார்கள். (2:258)

S.S.H.Muhammed Lebbai (Melapalayam)

நாட்டின் சார்பாகவும் இந்த வெற்றிகரமான ஜல்ஸாவிற்கு வாழ்த்தைக் கூறிக் கொள்கின்றேன். தாங்கள் எனது நாட்டிலும் இந்த போதனைகள் மற்றும் அன்பைப் பொதுவாகப் பரப்புமாறு நான் அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு அழைப்பு விடுத்துக் கொள்கிறேன். எனது நாடு பல ஆண்டுகளாப்க போர்க்களமாக இருந்து இப்போது அமைதியின் பக்கம் சென்று கொண்டிருக்கிறது. இந்தப் போதனைகளால் நாட்டில் அமைதி நிலைபெறுவது சாத்தியமாகலாம்.

மேலும் கூறுகின்றார்: இப்போது நான் திரும்பிச் சென்று இதுவே உண்மை இஸ்லாம் ஆகும் எனும் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தூதுச் செய்தியை அடுத்தவர்களுக்கு எட்ட வைப்பேன்.

பிறகு உலகளாவிய பைஅத் பற்றி கூறுகின்றார்: மிகவும் தாக்கம் எனக்கு ஏற்பட்டது. நான் அஹ்மதி அல்ல. ஆனால் நீங்கள் பைஅத் செய்து கொண்டிருந்தபோது நான் முடிந்த வரை இந்த ஜமாஅத்திற்கு எனது நாட்டில் உதவி செய்வேன் என்று எனக்கு நானே உறுதி எடுத்துக் கொண்டேன்.

அவருக்கு என்னுடன் சந்திப்பும் நிகழ்ந்தது. இப்போது நீங்கள் என்னை சுதந்திர மத்திய ஆப்பிரிக்காவிற்கான உங்கள் தூதராக கருதிக் கொள்ளுங்கள் என்று அப்போது அவர் என்னிடம் கூறினார்.

பீராகோயேவின் Vice Minister of Religion கலந்து கொண்டார். Fernando Griffith சாஹிப் கூறுகின்றார்: எனக்கு அஹ்மதிய்யா ஜமாஅத்தைப் பற்றி அறிந்து மிகுந்த மகிழ்ச்சி ஏற்பட்டது. எண்ணற்ற மக்கள் தன்னார்வத் தொண்டர்களாக தொண்டாற்றியதையும் ஒரு ஒன்றிணைந்த குறிக்கோளிற்காக இணைந்து பணியாற்றியதைப் பார்த்து மிகவும் நன்றாக இருந்தது. பீராகோயே நாடு என்ற அடிப்படையில் தங்களின் ஜமாஅத் மூலமாக அதிகமானவற்றை கற்றுக் கொள்ள முடியும்.

பிறகு எனது சொற்பொழிவு பற்றி கூறுகின்றார்: குழந்தைகளின் கல்வி மற்றும் தர்பிய்யத் மீது அதிக அழுத்தம் கொடுத்தீர்கள். மேலும் நெருங்கியவர்களுடன் நல்ல முறையில் தொடர்பை நிலைநாட்ட வேண்டியதன் மீது அதிக அழுத்தம் கொடுத்தீர்கள். அவருக்குக் குறிப்பாக பெண்கள் மற்றும் குழந்தைகள் தொடர்பாகக் கூறப்பட்ட இஸ்லாமிய போதனைகள் மிகவும் பிடித்து விட்டது. ஏற்பாடுகள் தற்காலிகமானதாக இருந்தாலும் உயர்வானதாக இருந்தது.

மாஸ்கோவிலிருந்து வந்திருந்த Iidar Safan சாஹிப் ஜல்ஸாவில் கலந்து கொண்ட பிறகு கூறினார்: மாஸ்கோவிலிருந்து ஜல்ஸாவில் கலந்து கொள்வதற்கான முதன் முதலாக வந்திருக்கும் ஒரு குடும்பம் நாங்கள் ஆவோம். எங்களுக்கு ஜல்ஸா ஸாலானா மிகவும் பிடித்திருந்தது. நாங்கள் இனி நீண்ட காலம் வரை இதனை நினைவில் வைத்துக் கொள்வோம். எங்களின் நண்பர்களுக்கும் இந்த நினைவுகளைப் பகிர்வோம்.

அனைத்து ஏற்பாடுகளும் நன்றாக இருந்தன. தன்னார்வத் தொண்டர்களின் பணி மிகவும் நன்றாக இருந்தது. அவர்கள் மிகவும் அழகிய நன்னடத்தையை வெளிப்படுத்தினர். எப்போதும் சிரித்த முகத்துடன் உதவி செய்யத் தயாராக இருந்தனர். சிறிய குழந்தைகளை தன்னார்வத் தொண்டர்களாகப் பணி செய்வதைப் பார்த்து மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. எல்லா இடங்களிலும் தங்களில் ஒருவரைப் போன்று எங்களைக் கவனித்துக் கொண்டனர் என்று கூறுகின்றார்.

அடுத்து பிரேசிலின் விருந்தினராகிய Mauro Henrique சாஹிப் மாநகராட்சி சபையின் தலைவராக உள்ளார். இவர் கூறுகின்றார்: எனக்கு எனது நாடாகிய பிரேசிலின் பிரதிநிதியாக இந்த மாபெரும் இஸ்லாமிய ஜல்ஸாவில் கலந்து கொள்வதில் எல்லையற்ற மகிழ்ச்சி ஏற்படுகின்றது. காலத்தின் கலீஃபா அவர்களின் அனைத்து சொற்பொழிவுகளும் உண்மை இஸ்லாத்திற்குச் சான்று பகர்பவையாகும். தங்களின் கூற்றுக்கள் நேரடியாக இதயத்தில் இறங்கி விடுகின்றன.

நான் ஜல்ஸாவின் மூன்று நாட்கள் ஆன்மீக சூழலில் கழித்தேன். எவ்வித சோர்வோ அல்லது தளர்விற்கான உணர்வோ ஏற்படவில்லை. ஒரு குரலுக்கு அனைவரும் எழுந்து அமரும் ஜல்ஸாவின் தொழுகையின் காட்சி என்னைப் பொருத்த வரையில் அசாதாரணமானதாகவும் வியப்பிற்குரிய ஒரு விஷயமாகவும் இருந்தது. (இவர் முஸ்லிம் இல்லை. ஆனால் எப்போதும் பார்த்து வந்தார்.)

இது மட்டுமின்றி மற்றுமொரு விஷயம் என் மீது ஒரு அசாதாரண தாக்கத்தை விட்டுச் சென்றது. அதனை கூறாமல் என்னால் இருக்கவே முடியாது. அது என்னவென்றால் கலீஃபா அவர்கள் எங்கே வந்தாலும் உடனடியாக ஆயிரக்கணக்கான எண்ணிக்கையைக் கொண்ட கூட்டம் சட்டென அமைதியாகி விடுகின்றது. யாருக்கும் எதுவும் கூற வேண்டிய தேவை ஏற்படுவதில்லை. இதிலிருந்து தெரிய வருவது என்னவென்றால், அமைப்பிற்கு மட்டுமல்ல. மாறாக அனைத்து மக்களின் உள்ளங்களிலும் தங்களின் கலீஃபா அவர்களுக்காக எல்லையற்ற கண்ணியமும் மரியாதையும் உள்ளது. இந்த நினைவுகளை எடுத்துக் கொண்டு திரும்பிச் செல்கின்றேன்.

பிறகு கூறுகின்றார்: நான் இதனை உணரவும் செய்தேன். இதனை எனது சென்டரில் எனது கவுன்சிலில் பரப்புவேன். உண்மையில் இதுவே உண்மை இஸ்லாம் ஆகும்.

அடுத்து, எக்கோவாடூரிலிருந்து வந்திருந்த Orli Mesias தனது பகுதியின் பிஷப் ஆக இருக்கின்றார். அவர் கூறுகின்றார்:

ஜல்ஸாவின் ஏற்பாடுகள் மிகவும் சிறப்பாக இருந்தன. உணவு எனக்கு வித்தியாசமானதாக இருந்தாலும் எனக்குப் பிடித்திருந்தது. ஜல்ஸாவின் சூழல் ஒரு பெரிய குடும்பத்தில் நடக்கும் நிகழ்ச்சியைப் போன்றிருந்தது. அதில் எந்த அந்நியரும் இருக்கவில்லை. மேலும் ஒருவர் மற்றவரை தெரியாதிருந்தும் கூட சொந்தக்காரர்களைப் போன்றும் மன நிம்மதியின் உணர்வும் ஏற்பட்டது. காலத்தின் கலீஃபா அவர்களின் அனைத்து சொற்பொழிவுகளிலும் நமது கண்ணோட்டத்தை மாற்ற அவசியமான அனைத்து அம்சங்களும் இருந்தன. எனக்கு அவர்களின் சொற்பொழிவில் மிக மிகப் பிடித்த விஷயம் என்னவென்றால், அவர்கள் எந்த சமுதாயம் அல்லது மார்க்கத்தைப் பற்றி எதிர்மறையான விஷயங்களை முற்றிலும் கூறவில்லை. மாறாக, அவர்களின் அனைத்து அழுத்தமும்

### திருக்குர்ஆனிலிருந்து...

ஷைத்தான் உங்களை வறுமைக்கு அஞ்சுமாறும், வெட்கக் கேடானதை உங்களுக்குத் தூண்டவும் செய்கிறான். அல்லாஹ்வோ தன்னிடமிருந்து ஒரு பெரும் மன்னிப்பையும், பேரருளையும் வாக்களிக்கின்றான். அல்லாஹ் தாராளமாக கொடுப்பவனும், நன்கு அறிபவனுமாவான். **(2:269)**

Faizal Hameed Ilahi (Tittacherry)

### திருக்குர்ஆனிலிருந்து...

தங்கள் செல்வத்தை இறை வழியில் செலவிட்டுப் பின்னர் எவ்வகையிலும் உபகாரத்தை நினைவூட்டாமலும், எவ்விதத்திலும் துன்பத்தைக் கொடுக்காமலும் இருப்போருக்கு அவர்களின் கூலி அவர்களின் இறைவனிடம் உண்டு. அவர்களுக்கு எவ்வித அச்சமும் ஏற்படாது. அவர்கள் கவலையடையவுமாட்டார்கள். **(2:263)**

A.Basheer Ahmad (Melapalayam)

இஸ்லாத்தின் உண்மையான மற்றும் உறுதியான போதனைகளின் மீதே இருந்தது.

ஜமாஅத்தின் இமாம் அவர்கள் தமது சொற்பொழிவுகளில் ஒரு ஹதீஸைப் படித்தார்கள். அதில் கூறப்பட்டிருந்தது. இறைவன் மறுமை நாளில் நான் பசித்திருந்தேன். நீங்கள் எனக்கு உணவளிக்கவில்லை. அல்லது தாகித்திருந்தேன். ஆடையின்றி இருந்தேன். தண்ணீர் வழங்கவில்லை. ஆடை வழங்கவில்லை என்று கேட்பான். இதே விஷயம் பைபிளிலும் கூறப்பட்டுள்ளது.

அது எனது உள்ளத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியது. இந்த அனைத்து போதனைகளும் ஒரே இறைவனிடமிருந்து உள்ளதாகும் என்பது எனக்கு பிறகு தெரிய வந்தது. அல்லாஹ் அவருக்கு இதனையும் புரிந்து கொள்ளும் வாய்ப்பை வழங்குவானாக. இந்த போதனைகள் எவன் புறமிருந்து வந்ததோ அவனே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அனுப்பினான். இந்த மக்கள் இஸ்லாத்தின் உண்மை போதனையை ஏற்பவர்களாக ஆகுவார்களாக.

அவர் கூறுகின்றார்: நான் இந்த ஜல்ஸாவில் கலந்து கொள்வதற்கான வீட்டிலிருந்து வெளியேறியபோது எனது மனதில் இஸ்லாம் ஒரு மார்க்கம் என்பதை விட மேலாக ஒன்றும் இருக்கவில்லை. ஆனால் இங்கு வந்து நான் பார்த்தேன். இஸ்லாம் ஒரு மார்க்கம் மட்டுமல்ல. மாறாக, ஒரு மாபெரும் சமத்துவமாகும். ஓர் குலமாகும். ஒரு குடும்பமாகும். நான் இஸ்லாத்தினால் நிலைநாட்டப்பட்டுள்ள சகோதரத்துவ அமைப்பையும் உங்களின் மார்க்கத்திற்காக உங்களது அர்ப்பணிப்பு மற்றும் தியாகங்களையும் பார்த்து மிகவும் தாக்கத்திற்குள்ளானேன்.

பிறகு உலகளாவிய பைஅத் நிகழ்ச்சியைப் பற்றி கூறுகிறார்: இந்த நிகழ்ச்சி அனைத்து பங்கேற்பாளர்களுக்கும் சிறப்பு வாய்ந்த ஒன்றாக மட்டுமே எனக்கு முன்பு தோன்றியது. ஆனால் பைஅத் தொடங்கியதும் யாரோ ஒருவர் எனது தோளில் கை வைத்தார். நானும் எனக்கு முன்னால் இருந்த ஒருவரின் தோளில் எனது கையை வைத்து விட்டேன். அப்போது ஒரு மின்னல் அனைத்து ஜல்ஸா பங்கேற்பாளர்களையும் கடந்து செல்வதாக உணர்ந்தேன். நான் குறிப்பாக அஹ்மதிக்கு இந்த பைஅத்திற்குப் பிறகு தம்மை புத்துணர்வுடன் உணர்வதாகவும் அவர்களுக்கு ஒரு புதிய வாழ்க்கை கிடைத்து விட்டதைப்போன்றும் உணர்ந்தேன். எனக்கு இந்த ஜல்ஸாவில் பங்கேற்க வாய்ப்பளித்து இஸ்லாத்தின் உண்மை போதனையை அறிமுகப்படுத்திய அனைவருக்கும் நான் நன்றி கூறிக் கொள்கிறேன். மேலும் குறிப்பாக நாம் சிலரது தவறான செயல்பாடுகளின் காரணமாக ஒட்டு மொத்த இஸ்லாமிய மார்க்கத்தையும் தவறாக எண்ணக் கூடாது.

பிறகு மொழியாக்கத் துறைக்கும் ஒரு விஷயத்தைக் கூறிக் கொள்கிறேன். அவர் எழுதியிருந்தார். அல்லது குறைபாடு உள்ளது. அதனை நாம் நிவர்த்தி செய்ய வேண்டும். M.T.A –வின் மொழியாக்கத் துறைக்கு அவர் கூறுகின்றார்:

இது மட்டுமின்றி ஸ்பானிஷ் மொழியாக்கம் தொடர்பாக நான் கூறிக் கொள்வது என்னவெனில், ஸ்பானிஷ் மொழியாக்கம் நாற்காலியில் இருந்தவர்கள் மட்டுமே கேட்கும்படியாக இருந்தது. வேறு எவராவது உட்கார நினைத்தால், எவராவது ரேஞ்சிலிருந்து வெளியேறி விட்டால் மொழியாக்க சத்தம் கேட்கவில்லை. ஸ்பானிஷ் மொழியாக்கத்தின் ரேஞ்சை அதிகரிக்க வேண்டிய தேவை உள்ளது. ஸ்பானிஷ் மட்டுமல்ல. மாறாக மற்றவர்களையும் சோதிக்க வேண்டும். இந்த விருந்தினர்களின் மூலமாக நமக்கு நமது சில குறைபாடுகளைப் பற்றியும் தெரிய வருகின்றது.

இதே போன்று ஸில்வேனியாவிலிருந்து Barbara Hocevar சாஹிபா வந்திருந்தார். இவர் கிறித்தவ பேராசிரியர் ஆவார். இவர் கூறுகின்றார்: அஹ்மதிய்யா ஜமாஅத் முன் வைக்கின்ற இஸ்லாத்தை நான் ஒருபோதும் பார்த்ததில்லை. ஜல்ஸாவைப் பார்த்து எனக்கு ஒரு புதிய இஸ்லாத்தைப் பார்ப்பதைப் போன்றிருந்தது. உங்களது ஜல்ஸா ஏற்பாடுகள் மிகவும் நன்றாகவும் உன்னதாமாகவும் உள்ளது. எந்த விவகாரமும் இல்லை. எந்த சண்டையும் இல்லை. எந்த அசுத்தமும் இல்லை. நான் இவ்விஷயத்தினால் தாக்கத்திற்குள்ளானேன்.

பிறகு கூறுகின்றார்: அஹ்மதிய்யா ஜமாஅத்தின் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் தொடர்பான கொள்கை, அதாவது சிலுவைச் சம்பவம், அன்னாரின் ஹிஜ்ரத் மற்றும் மரணம் எல்லாவற்றையும் விட மேலான நம்பகத்தன்மையுடனும் உண்மைகளுக்கு ஏற்றவாறும் உள்ளதாக தெரிய வருகின்றது.

போஸ்னியாவிலிருந்து ஓர் உறுப்பினர் கலந்து கொண்டார். ஒரு குடும்பம் கலந்து கொண்டது. இவர் அரசு அதிகாரி ஆவார். இந்த குடும்பத்தின் தலைவர் Senaid Begic நாடாளுமன்ற உறுப்பினரான ஸ்னாயிஜ் சாஹிப் ஆவார். ஒருவர் அரசு அதிகாரியாவார். ஒருவர் நாடாளுமன்ற உறுப்பினர் ஆவார். இவர் கூறுகின்றார்:

எல்லாவற்றிற்கும் மேலாக ஜமாஅத் எனக்கும் எனது குடும்பத்திற்கும் ஒரு நிம்மதியான அன்பு நிறைந்த சூழலில் சில நாட்களைக் கழிக்க வாய்ப்பளித்ததற்காக அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு நான் நன்றி கூறிக் கொள்கிறேன். யூ.கே ஜல்ஸா ஸலானா அனுபவம் எங்களுக்கு முற்றிலும் புதியதாகும். இந்த ஜல்ஸாவின் அழகையும் ஏற்பாடுகளின் விதங்களின் அழகையும் கூற என்னிடம் சொற்கள் இல்லை. ஏற்பாட்டு அமைப்பு ஒவ்வொரு சிறிய சிறிய விஷயத்தையும் கவனத்தில் கொண்டிருந்தது. அனைத்து தன்னார்வத் தொண்டர்களும் புன்சிரிப்புடன் தங்களின் பொறுப்புகளை ஆற்றினார்கள்.

Humanity First கண்காட்சியில் எனக்கு கூறப்பட்டது. இந்த சிறப்புமிக்க பணியின் தொடக்கத்திற்கான காரணம் எனது நாடாக இருந்தது. அங்கு போரின்போது அஹ்மதிய்யா ஜமாஅத் தனது கலப்பற்ற தொண்டினை முன் வைத்தது. இன்னும் முன் வைத்துக் கொண்டிருக்கிறது. இந்த அனைத்து விஷயங்கள் மட்டுமின்றி ஒரு குறிப்பிட்ட விஷயம் என்னையும் எனது குடும்பத்தினர் அனைவரையும் அதிக தாக்கத்திற்குள்ளாக்கியது.

அவர் அடுத்து, எனது சந்திப்பைப் பற்றி மிகவும் நல்ல சந்திப்பாக இருந்தது எனக் கூறுகின்றார். என்னுடன் அவருக்கு சந்திப்பு நிகழ்ந்தது. பிறகு கூறுகின்றார்: நான் இவ்விஷயத்தை அறிவிப்பு செய்கின்றேன். என் சார்பாகவும் கூறுகின்றார். என்

## திருக்குர்ஆனிலிருந்து...

நீங்கள் தருமங்களை வெளிப்படையாகச் செய்தால், அது(வும்) மிகச் சிறந்ததேயாகும். நீங்கள் அவற்றை மறைவாக ஏழைகளுக்கு வழங்கினால், அது உங்களுக்கு மிக்க நன்றேயாகும். (இதனால்) அவன் உங்களுடைய (பல) தீமைகளை உங்களை விட்டும் நீக்கி விடுவான். நீங்கள் செய்வதை அல்லாஹ் நன்கு அறிபவனாவான். (2:272)

M.Y. Shahul Hameed (Melapalayam)


O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230

O.A.N. DOORS & STEELS



All Types of wooden Doors, Skin Doors Steal Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram, (opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

புறமிருந்து இறுதி வரை இந்த நட்புறவை பற்றுறவைப் பேண வேண்டும் என்று அறிவிப்பு செய்கின்றேன். போஸ்னியாவிலும் இன்னும் இந்த நாட்டிற்கு வெளியிலும் வாய்ப்பிற்கேற்ப நான் இந்த ஜமாஅத்திற்கு எல்லா விதமான ஒத்துழைப்பிற்கும் என்னை முன் வைக்கின்றேன்.

அடுத்து ஸில்வேனியாவைச் சேர்ந்த Muanis Sinanovic சாஹிப். இவர் எழுத்தாளர் ஆவார். பிறப்பு முஸ்லிம் ஆவார். ஆனால் ஒருபோதும் அவருக்கு இஸ்லாத்தில் ஈடுபாடு இருக்கவில்லை. பெயரளவிலான முஸ்லிமாக இருந்தார். இவர் கூறுகின்றார்:

கடந்த இரண்டு ஆண்டுகளாக நான் இஸ்லாத்தைப் பற்றி படிக்கத் தொடங்கினேன். பிறகு எனது தொழுகைகளைத் தொழத் தொடங்கினேன். ஆனால் எந்த இமாமிற்கு பின்னாலும் ஒருபோதும் தொழுதது கிடையாது. ஜமாஅத்தாக தொழுவதற்கான இன்பம், எனக்கு இங்கு வந்து கண்டேன். முற்றிலும் தனித்துவமான ஓர் இன்பமாகும். கடந்த இரண்டு ஆண்டுகளாக இஸ்லாத்தில் நான் ஈடுபாடு காட்டத் தொடங்கியதிலிருந்து நான் எந்தவொரு இஸ்லாமிய அமைப்பு அல்லது இஸ்லாமிய வழிகாட்டி சென்டரைப் பின்பற்றியது கிடையாது.

மாறாக சுயமாக அறிவு மற்றும் உள்ளத்தால் இஸ்லாத்தைப் புரிய முயற்சி செய்தேன். எனக்கு அஹ்மதிய்யத்தைப் பற்றி தெரிய வந்தபோது, அஹ்மதிய்யா ஜமாஅத்தின் போதனை நான் சுயமாக புரிந்து வைத்திருந்த அதே போதனைகளாகத்தான் இருந்தது. அதாவது அனைத்து பொருளும் இயற்கைக்கு ஒத்ததாகும். மற்றுமொரு விஷயம் அவருக்கு பிடித்திருந்தது. அது என்னவென்றால், அஹ்மதிகள் செய்வதையே சொல்கின்றனர்.

இது ஒரு மிகப்பெரிய இந்த அடிப்படையில் நமக்கு ஒரு சவாலும் ஆகும். எப்போதும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். நமது சொல்லும் செயலும் ஒன்றாக இருக்க வேண்டும். நாம் செய்வதையே கூற வேண்டும்.

ஒரு ரஷ்யன் விருந்தினரான இஸ்ஸத் சாஹிப் கூறுகின்றார்: முதன் முறையாக ஜல்ஸாவில் கலந்து கொள்கிறேன். எனது பாட்டனார் என்னை ஜல்ஸாவில் கலந்து கொள்ளுமாறு அறிவுறுத்தினார்கள். இந்த முறை வருவதற்கு அவரது பாட்டனார், அஹ்மதிகள் உன்னை அழைக்கின்றனர். அங்கு செல் என்று கூறினார்.

அவர் கூறுகிறார்: நான் இந்த ஜமாஅத்தின் மக்களைப் பார்த்து வியப்பில் ஆழ்ந்துள்ளேன் என்பதே நடுநிலையான விஷயமாகும். ஜல்ஸாவில் கலந்து கொண்ட அனைத்து அஹ்மதிகளும் எப்போதும் நல்லொழுக்கத்துடன் வலம் வந்தனர். எப்போதும் உதவிக்காக தயாராக இருந்தனர். எல்லா சிக்கலிலும் நல்ல ஆலோசனைகளை வழங்கினர்.

ஹாலந்திலிருந்து ஒரு குழு வந்திருந்தது. முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த Van Bommel சாஹிப் ஒரு சிறந்த மனிதராக இருந்தார். முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினராகவும் இருந்தார். அவர் கூறுகின்றார்: ஜமாஅத்தை நான் நன்றாக அறிவேன். முன்பும் ஜல்ஸாவிற்கு வந்துள்ளேன். ஆனால் இம்முறை ஏற்பாடுகள் மிகவும் தாக்கத்திற்குள்ளாக்கியது. தன்னார்வத் தொண்டர்கள் எவ்வாறு இந்த அளவிற்கு அபாரமாக அனைத்து ஏற்பாடுகளையும் செய்து விடுகின்றனர் என்பதை இப்போது வரை என்னால் புரிந்து கொள்ள முடிவதில்லை.

ஈரான் வம்சாவழியைச் சார்ந்த மிஸ் மக்கீதாவும் ஏற்பாடுகளால் மிகவும் தாக்கத்திற்குள்ளானார். குறிப்பாக ஜமாஅத் இவ்வளவு பெரிய இடத்தை எவ்வாறு பெற்றது? எவ்வாறு இந்த அனைத்து ஏற்பாடுகளும் நடைபெறுகின்றன என்பதில் வியப்பை வெளிப்படுத்தினார். அவருக்கும் பிறகு இது பற்றி விளக்கப்பட்டது. ஹஸ்ரத் ஸல்மான் ஃபார்ஸி (ரலி) அவர்கள் தொடர்பாக விளக்கப்பட்டது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (ரலி) அவர்களின் வருகை தொடர்பாக தப்லீக் அமர்வும் நடைபெற்றது. எவ்வாறிருப்பினும், அவர் மீது நல்ல தாக்கம் ஏற்பட்டது. தாக்கத்திற்குள்ளானவாறு சென்றார்.

இத்தாலியைச் சார்ந்த Vasco சாஹிப் Naples பல்கலைக்கழகத்தில் இஸ்லாமிய மார்க்கச் சட்டம் மற்றும் வேதத்தின் பேராசிரியராக இருக்கின்றார். அவர் கூறுகின்றார்: ஜல்ஸா ஸாலானா என்னைப் பொருத்த வரையில் மிகவும் வெற்றிக்குரியதாக இருந்தது. நான் ஜமாஅத்தின் இமாம் அவர்களின் நிறைவுரையைக் கேட்டேன். குறிப்பாக தங்கள் குடும்பம் மற்றும் குழந்தைகளின் உரிமைகளைப் பற்றியும் குறிப்பாக பெண்களின் உரிமைகளைப் பற்றியும் கூறிய இவ்விஷயங்கள் எனக்கு மிகவும் பிடித்திருந்தது. நான் உலகளாவிய பைஅத்திலும் கலந்து கொண்டேன். நான் இந்த நிகழ்ச்சியில் மிகவும் உணர்ச்சிவசப்பட்டு விட்டேன்.

இத்தாலியிலிருந்து Madalena சாஹிபா வாடிகன் இஸ்லாமிய மற்றும் அரபி யுனிவர்சிட்டியில் Ph.d பட்டம் பெற்றுள்ளார். அவர் கூறுகின்றார்:

ஜல்ஸா ஸாலானா மிகவும் நல்ல ரம்மியமான அமைதி மற்றும் அன்பு நிறைந்ததாக நடைபெற்றது. அனைத்து ஏற்பாடுகளும் சிறப்பாக இருந்தது. சொற்பொழிவுகள் மிகவும் நன்றாக இருந்தது. அஹ்மதிகளுக்கு மட்டுமின்றி அனைத்து விருந்தினர்களுக்கும் அறிவை அதிகப்படுத்துவதாக இருந்தது. மேலும் அஹ்மதிய்யத்தின் குறிப்பாக இஸ்லாத்தின் அறிமுகத்தை அதிகரிக்கும் விஷயங்கள் இருந்தன. அவை மிகவும் நன்றாக இருந்தன.

அடுத்து ஃபிரான்ஸின் நீதித்துறை அலுவலகத்தில் பணியாற்றும் Jawad Boulaamayl சாஹிப் கூறுகின்றார்:

முதன் முறையாக ஜல்ஸாவில் கலந்து கொண்டேன். எனக்கு உங்கள் ஜமாஅத்தை இவ்வளவு நெருக்கமாக அறிந்து கொள்வதற்கான வாய்ப்பு கிடைத்தது எனக்கு மகிழ்ச்சியாக உள்ளது. ஜல்ஸாவின் நாட்களில் IAAAE மற்றும் Humanity First –ன் கண்காட்சியில் சென்று தங்களது ஜமாஅத்தின் வெற்றிக்குரிய பணிகளைப் பார்த்து பெரும் தாக்கத்திற்குள்ளானேன். சமுதாய நிற பாகுபாடின்றி மனித இனத்திற்கு சேவை செய்யக் கூடிய இதுவே உண்மையான இஸ்லாம் ஆகும். பாதுகாப்பு ஏற்பாடுகள் பொதுவான ஏற்பாடுகள் ஆகியவற்றைப் பார்த்து மிகவும் தாக்கத்திற்கு உள்ளானேன். எல்லா ஏற்பாடுகளிலும் மிகவும் புலமை தென்பட்டது.

ஸ்பெயினின் குழுவில் ஒரு விருந்தினர் Susana Morales வந்திருந்தார். எல்லாரிடத்தும் அன்பு; எவரிடத்தும் பகை இல்லை எனும் கூற்றைக் கூறியவாறு இவர் கூறுகின்றார்:

இந்த வாசகம் எனது எண்ணத்தில் முழுமையான விதத்தில் இந்த மகத்தான இஜ்திமாவின் பிரதிபலிப்பை வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றது. நான் பலதரப்பட்ட மக்களை பரஸ்பரம் சந்திப்பதைப் பார்த்தேன். இது எப்படிப்பட்ட ஒரு மார்க்கம் என்றால் இதனால் உலகத்தில் அமைதியை நிலைநாட்டும் விவகாரம், அநீதிக்கு எதிராகப் போரிடச் செல்ல வேண்டும். சந்தேகத்திற்கிடமின்றி சில நாட்கள் எனது மனதில் எப்போதும் பதிந்திருக்கும். ஒருபோதும் தொலைத்து விட மாட்டேன்.

பிரேசிலிலிருந்து ஒரு கத்தோலிக்க கிறித்தவரான ஒரு நண்பர் Dan Francisco பத்திரிகை மற்றும் ரேடியோவின் அதிபர் ஆவார். அரச குடும்பத்துடன் தொடர்புடையவர்.

அவர் கூறுகின்றார்: எனக்கு மார்க்க விஷயங்கள் தொடர்பாக தொடர்புள்ளது என்றாலும் ஜல்ஸாவின் அழகிய ஏற்பாட்டை நான் பார்த்து மிகவும் தாக்கத்திற்கு உள்ளானேன். நிறைய விஷயங்களைக் கற்றுக் கொள்ள முடிந்தது. நான் எனக்குள் ஒரு மாற்றத்தைப் பார்க்கின்றேன்.

அவர் கூறுகின்றார்: நான் இந்தியாவின் ஒரு பள்ளிவாசலுக்கு எனது மனைவியுடன் சென்றிருந்தேன். அங்கு முஸ்லிம்களின் தரப்பிலிருந்து விரும்பத்தகாத செயல்களைப் பார்த்தேன். ஆனால் இங்கு ஜல்ஸா ஸாலானாவின் நடுவிலும் பிறகும் அதற்கு எதிரில் மிகுந்த கண்ணியத்தைப் பெற்றேன்.

ஸ்பெயினிலிருந்து சோஸியலிஸ்ட் பார்ட்டியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் Eustaquio சாஹிப் கூறுகின்றார்: நான் என்னை மார்க்க விவகாரங்களிலிருந்து விலகியவனாகக் கருதுகின்றேன். ஆனால் அஹ்மதிய்யா ஜமாஅத் செயல் மூலமாக அன்பின் தப்லீக் செய்கிறது. இதன் காரணமாக ஜமாஅத்திற்கு நெருக்கமாக வந்து விட்டேன். நேற்றைய பைஅத் நிகழ்ச்சி எனக்குள் மிகச் சிறந்த உணர்வுகளைத் தோற்றுவித்தது. எனவே நான் இந்த அழியாத அனுபவங்களால் மிகவும் மகிழ்ச்சியாகியுள்ளேன்.

பங்களாதேஷிலிருந்து ஒரு நீதிபதி வந்திருந்தார். ஓய்வு பெற்ற நீதிபதியாகிய நிஸாமுத்தீன் சாஹிப் கூறுகின்றார்:

நான் அஹ்மதி இல்லை. ஆனால் அஹ்மதிகள் முஸ்லிம் ஆவார்கள். உலகின் பல்வேறு நாடுகளில் அஹ்மதிகளின் மீது நீண்ட காலமாக அநீதியிழைக்கப்படுகின்றது. மனித உரிமைகளின் ஆக்டிவிஸ்ட் இருப்பதன் காரணமாக நான் மனித நேயத்தின் அடிப்படையில் அஹ்மதிகளின் மீது அனுதாபம் கொண்டுள்ளேன். பல்வேறு நாடுகளில் பயணம் மேற்கொண்டேன். ஒவ்வொரு மனிதனுக்கும் அவன் தனது கொள்கையை பிரச்சாரம் செய்ய உரிமையுள்ளது. ஒழுங்குமுறைகளைப் பார்த்தேன். ஜமாஅத்தினர் தங்களின் கலீஃபாவிற்காக அன்பு, கண்ணியம் மற்றும் அறிவின் தாகம் மிகவும் தாக்கத்திற்குரிய பொருளாகும்.

நான் அனைத்து சொற்பொழிவுகளையும் கவனமாகக் கேட்டேன். அதனால் எனது சில தவறான எண்ணங்கள் நீங்கி விட்டன. அஹ்மதிகள் அதிகமதிகமாகப் பேச வேண்டும். இதன் மூலமாக அவர்களைப் பற்றி பரவியுள்ள தவறான எண்ணங்கள் நீங்கி விடும். முன்பு நானும், அஹ்மதிகள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை காத்தமுன் நபிய்யீன் ஆக ஏற்பதில்லை என்றே கருதி வந்தேன். ஆனால் அவ்வாறு இல்லை என்பது இங்கு வந்து எனக்கு தெரிய வந்தது. சுருக்கம் என்னவென்றால், நான் இந்த ஜல்ஸாவினால் நிறைய கற்றேன். மேலும் நான் அனைவருக்கும் குறிப்பாக அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கிறித்தவ கத்தோலிக்க பிரிவுடன் தொடர்புடைய Hugh Farey விஞ்ஞானி ஆவார். பிரிட்டிஷ் சொஸைட்டி ஆஃப் டூரின் ஷ்ரொடின் முன்னாள் எடிட்டர் ஆவார்.

அவர் கூறுகின்றார்: நான் தொடர்ச்சியாக ஜல்ஸாவிற்கு ஐந்து ஆண்டுகளாக வருகின்றேன். நான் முதன் முதலாக அழைக்கப்பட்ட போது அதில் கரைந்து விட்டதாக உணர்ந்த அந்த ஆன்மாவை, தனது துஆக்களினால் முடிவுர வைத்து விடாமல் உள்ளது என்பதை என்னால் கூற வேண்டியதுள்ளது. நான் ஷ்ராவுட் ஆஃப் டூரினின் மிகவும் புலமை பெற்றவன் ஆவேன். மேலும் இது எப்படிப்பட்ட ஒரு துணி என்றால் இது அஹ்மதிய்யா ஜமாஅத்தில் மிகவும் ஆர்வத்தைக் கொண்டிருக்கக் கூடிய ஒன்றாக இருக்கின்றது. ஏனென்றால் மஸீஹின் மரணம் சிலுவையில் நிகழவில்லை என்பதற்கான ஒரு சான்றாக இது உள்ளது. இவ்வாறிருந்தும் இவ்விஷயம் அவர்களை இவற்றிலிருந்து தடுப்பதில்லை.

அதாவது அது இதன் விஞ்ஞானிகளுக்கு அதுவும் அவர்களில் பலர்; இந்த படம் மரணித்து விட்ட ஒருவரை பறைசாற்றுகின்றது எனும் விஷயத்தில் ஒன்றுபட்டவர்களாக இருக்கும் நிலையில் அழைப்பு விடுக்க வேண்டும் எனும் விஷயம் உயர்ந்ததாகும். அவர் எந்த மார்க்கத்துடன் தொடர்பு வைத்திருந்தாலும் அவரை அழைக்கின்றனர். எனது சொந்த அனுபவமாகும். இது ஆரம்ப காலத்தில் தயாரிக்கப்பட்டதாகும். மஸீஹ் தப்பித்து விட்டார். பிறகு காஷ்மீருக்கு ஹிஜ்ரத் செய்து சென்று விட்டார் என்ற அஹ்மதிகளின் கூற்றிற்கு இது எதிரானது கிடையாது. அஹ்மதிகளின் பார்வையே எனது பார்வையாக இருக்கின்றது. இதனால் இதுவும் வெளிப்படுத்துகின்றது. ரிவியூ ஆஃப் ரிலீஜியன்ஸின் இக்கண்காட்சி அஹ்மதிகளின் பரந்த மனதையும் அமைதி நிறைந்த இயல்பையும் வெளிப்படுத்துகின்றது.

பிறகு கூறுகின்றார்: இங்கு எங்களுடன் பலதரப்பட்ட கருத்துப் பரிமாற்றங்கள் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன. அமெரிக்காவிலிருந்து வந்திருந்த டாக்டர் சாஹிப் ஒரு பேனலில் கலந்து கொண்டார். அவர் டிராமா சர்ஜினாக பணியாற்றுகின்றார். முதலில் அஹ்மதி அறிஞர்களுடன் கலந்து கொண்டார். அப்போது அவர் இந்தப் பேனலில் கலந்து கொண்டார். அவரது சொந்த அனுபவத்தின் பரந்த அறிவு அவர்களின் சான்றை உறுதியாக்கி விட்டது. துணியில் காணப்பட்ட தப்பி விட்ட மனிதர் தொடர்பாக முன் வைக்கப்பட்டது. இவரும் பெரும் தாக்கத்திற்குள்ளானார்.

அடுத்து கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் பீட்டர் வில்லியம் ஷராவுட் ஆஃப் ஷ்டூரின் கமிட்டியின் அரசு உறுப்பினர் ஆவார். இவர் கூறுகின்றார்:

எனது முதல் ஜல்ஸா ஆகும். நான் இதற்கு முன்பு கலந்து கொள்ளாததால் வருத்தப்படுகிறேன். இதுபோன்ற ஜல்ஸாக்களில் வர வேண்டும் என நான் விரும்புகின்றேன். நான் இனி வரும் நாட்களிலும் நிச்சயம் வருவேன் என நம்புகிறேன். ஆனால் நான் இந்த கூட்டங்களினால் மிகவும் தாக்கத்திற்கு உள்ளாகினேன். இவ்வளவு பெரிய எண்ணிக்கையில் மக்கள் ஒன்று கூடுவது பிறகு இவ்வளவு உழைப்பு மற்றும் செலவு செய்வது பிறகு இவ்வளவு முயற்சியை செலவு செய்வது, இவ்வளவு அன்புடன் அனைத்தையும் நடத்துவது, ஷ்டூரின் கண்காட்சிக்காக இவ்வளவு முயற்சி எடுப்பது, பிறகு இவ்வளவு பணிவுடன் அஹ்மதிய்யா ஜமாஅத் கண்காட்சியை நடத்துவது ஆகியவை இம்மக்கள் இதுபற்றி மேலும் அறிய விருப்பம் கொண்டிருக்கின்றார்கள் என்பதை வெளிப்படுத்துகின்றது. ஆனால் இன்னும் நாங்களே முழுமையாக இதனைப் புரியவில்லை.

அடுத்து கனடாவின் அப்ரீஜினல் கம்யூனிட்டியின் பிரதிநிதித்துவம் இருந்தது. அவர்கள் அப்ரோயிஜன்ஸின் பிரதிநிதிகளாவர். Chief Myeengun Henry கூறுகின்றார்:

ஜல்ஸா ஸாலானாவில் கலந்து கொண்டது எனக்கு மிகவும் முக்கியத்துவம் பெற்றதாகும். ஏனென்றால் இதனால் எனது வாழ்க்கை மாறி விட்டது. நான் இப்போது இஸ்லாம் தொடர்பாக முன்பை விட அதிகமாக தெரிந்து கொண்டேன். இஸ்லாம் மற்றும் கனடாவின் பழைய மார்க்கத்திற்கும் நிறைய ஒற்றுமைகள் உள்ளதாக உணர்ந்தேன். இஸ்லாம் பெண்களுக்குரிய உரிமைகளை வழங்குகின்றது எனும் விஷயம் என்னை வியப்பில் ஆழ்த்தி விட்டது. முதலில் எனக்கு எல்லா திசையிலும் ஆண்களே தென்பட்டார்கள். ஆனால் பெண்களின் ஏற்பாடும் ஆண்களைப் போன்று உள்ளது என்பது பிறகுதான் தெரிய வந்தது. இது எப்படிப்பட்டதென்றால்

இதனை அதிகமான முஸ்லிம் அல்லாதவர்கள் அறிவதில்லை. இஸ்லாம் ஆண், பெண் உரிமைகளில் பாகுபாடு காட்டுவதில்லை என்று நான் அவர்களுக்கு கூறுவேன்.

அவர் எனது சந்திப்பையும் பெற்றார். அதன் தாக்கமும் உள்ளது. என்னுடன் அவரது சந்திப்பிற்கான நல்ல தாக்கம் ஏற்பட்டுள்ளது.

இதைப் போன்று Chief Rane Warren Chaboyer ஜல்ஸா ஸாலானாவில் கலந்து கொண்டதைப் பற்றி கூறுகின்றார்:

எனக்கு மிகவும் மகிழ்ச்சி ஏற்பட்டது. எனக்கு இவ்வளவு பெரிய ஜல்ஸாவில் சொற்பொழிவாற்றும் வாய்ப்பு கிடைத்தது. இஸ்லாம் இவ்வளவு அமைதி நிறைந்த இறை படைப்பினங்களுடன் அன்பு காட்டுமாறு போதிக்கும் மார்க்கம் என்று என்னால் சிந்தித்துக்கூட பார்க்க முடியாமல் இருந்தது.

அவர் கூறுகின்றார்: அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் அவர்களுக்கு அபாரீஜினல் கம்யூனிட்டியின் மிக உயரிய கௌரவத்தை மிக உயரிய கௌரவத்தால் கௌரவிக்க எண்ணினேன். நான் எனது இந்த விருப்பத்தை என்னுடன் வந்தவரிடம் கூறினேன். அதனை நிறைவேற்ற நான் முடிவு செய்தவாறு ராஜாளி இறக்கையின் இறகால் செய்யப்பட்ட எனது கிரீடத்தை எடுத்து அதிலிருந்து, அது இறக்கையாலும் அதில் எங்களுக்கு மிகவும் மதிப்பு மிக்கதான ராஜளி இறக்கையால் ஆன கிரீடத்திலிருந்து எடுத்து ஒன்றை அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாமிற்கு முன் வைக்கிறேன். இது மிகப்பெரும் கௌரவமாகும். இதுவரை நான் எந்த தலைவருக்கும் வழங்கியதில்லை. நான் அஹ்மதிய்யா ஜமாஅத் மற்றும் அதன் கொள்கைகளை மிகவும் மதிக்கின்றேன்.

பிறகு என்னுடன் நேரத்தை செலவிடுவதைப் பற்றி கூறுகின்றார்: எனக்கு மிகவும் நன்றாக இருந்தது என்று கூறுகின்றார். பிறகு அவர் ஒரு சந்திப்பின்போது அந்த இறகை வழங்கினார்.

பேல்ஸின் ஒரு விருந்தினர் எம் சேனலின் டைரக்டர் ஆஃப் நியூஸ் –ன் வேன்ட்டிரியோ லாவயிஃப் கூறுகின்றார்:

நான் அஹ்மதிகளிடம் கண்ட ஒற்றுமை மனித இனத்தில் ஒரு புதிய ஆன்மாவை ஊதக்கூடியதாக இருந்தது. அதனைப் பார்த்து நான் மனதில் அமைதியின் வேட்கை தலைதூக்குகின்றது. சிறப்பான வசதிகள் எங்களுக்கு செய்து தரப்பட்டது. ஏற்பாடுகள் மிகவும் சிறப்பாக இருந்தது. ஜமாஅத்தின் இமாமின் சொற்பொழிவுகள் தற்கால தேவைக்கு முற்றிலும் ஏற்றதாக இருந்தது. என்னை இந்த அனைத்திலும் தங்களின் பெண்கள் மத்தியில் நிகழ்த்திய சொற்பொழிவு தாக்கத்திற்குள்ளாக்கியது. இந்த அனுபவம் என்னை இஸ்லாமிய மார்க்கத்தை மேலும் புரிந்து கொள்ள தகுதியுடையதாக ஆக்கி விட்டது. ஜல்ஸாவில் கலந்து கொண்டதன் காரணமாக எனக்கு அஹ்மதிய்யத் மற்றும் அதன் கொள்கைள் தொடர்பான கேள்விகளைக் கேட்பதற்கான வாய்ப்பு கிடைத்தது. அதனால் எனக்கு பயனும் ஏற்பட்டது.

அடுத்து பெலிஸிலிருந்து Chester Williams சாஹிப். இவர் பெலிஸ் நாட்டின் போலீஸ் கமிஷனர் ஆவார். அவர் கூறுகின்றார்:

இஸ்லாம் தொடர்பான எனது அறிவு அதிகரித்தது. இந்த ஜல்ஸாவில் கலந்து கொள்வதற்கு முன்பு முஸ்லிம்கள் அனைவரும் ஒன்றுபோல்தான் என்று எண்ணி வந்தேன். மேலும் பிரிவுகள் உள்ளது என்பது இப்போது புரிந்தது. பாராட்டுக்குரிய விஷயம் என்னவென்றால், அஹ்மதிகள் அமைதியைப் பரப்புகின்றனர். இளைஞர்களின் சீர்திருத்தத்திற்காக நிறைய நேரத்தை செலவிடுகின்றனர்.

அமெரிக்காவிலிருந்து அரசு சார்பாக காங்கிரஸ் ஸ்டாஃப் மட்டுமின்றி U.S –ன் மார்க்கச் சுதந்திர கமிஷனின் பிரதிநிதிகளும் வந்திருந்தனர். இதேபோன்று சீனாவின் பிரதிநிதியான ஓயேகோர் முஸ்லிம் கூறுகின்றார்:

நான் U.K –ன் ஜல்ஸா ஸலானா மற்றும் U.S –ன் ஜல்ஸா ஸாலானா இரண்டிலும் கலந்து கொண்டுள்ளேன். இதனைப் பார்ப்பது மிகவும் வியப்பிற்குரியதாகும். எவ்வாறு ஜமாஅத் இணைந்து பணி செய்கின்றது. ஜமாஅத்தின் அனைத்து தன்னார்வத் தொண்டர்களும் கலப்பின்றி சேவை செய்வது மிகவும் தாக்கத்திற்குரியதாகும். இந்த ஜல்ஸா இளைஞர்களை ஒற்றுமையின் பக்கம் திருப்பியுள்ளது. ஒற்றுமையான சமூகமும் பிறந்து விட்டது. இது அவரது பொதுவான தாக்கமாகும். பிறகு மீதமுள்ளதை இப்போது நான் விட்டு விடுகின்றேன்.

அர்ஜென்டைனின் ஒரு விருந்தினர் பத்திரிகையாளர் ஆவார். அவரைப் பற்றி கூறி விடுகின்றேன். அவர் கூறுகின்றார்:

எனக்கு பத்திரிகையாளன் என்ற முறையில் பல்வேறு யூனிட்டுகளில் பங்கேற்கும் வாய்ப்பு கிடைத்துக் கொண்டே இருக்கும். ஆனால் உங்களின் ஜல்ஸாவில் அனைத்து பங்கேற்பாளர்களும் உறுப்பினர்களும் ஒட்டு மொத்தமாக ஏற்பாட்டாளர்களாக இருப்பதாக தெரிய வருவது அசாதாரணமாக உள்ளது. பங்கேற்பாளர்களாகவும் ஏற்பாட்டாளர்களாகவும் இருக்கின்றீர்கள். இருவரும் மற்றவரைக் கூறுகின்றனர். மற்ற யூனிட்டுகளில் வெளிப்படையாகப் பங்கேற்பார்கள். மேலும் ஏற்பாட்டாளர்களின் வேறுபாடு தெரியும். அது மட்டுமல்லாமல் ஏற்பாட்டாளர்கள் உயர் பயிற்சி பெற்றவர்களாக இருப்பார்கள். ஆனால் உங்கள் ஜல்ஸாவில் ஒரே நேரத்தில் அனைத்து பங்கேற்பாளர்களும் விருந்தினராகவும் இருக்கின்றனர். ஏற்பாட்டாளர்களாகவும் இருக்கின்றனர் என்பது தெரிகின்றது. தேவை ஏற்படும்போது ஏற்பாட்டாளர்கள் விருந்தினர்களாக மாறி விடுகின்றனர். இது எப்படிப்பட்ட அழகு என்றால் இது நமது ஜல்ஸாக்களில் எப்போதும் இருக்க வேண்டும்.

கொலம்பியாவுடன் தொடர்புடைய ஒரு பத்திரிகையாளரும் வக்கீலுமான Jesus Gabalam கூறுகின்றார்:

மனித உரிமைகள் தொடர்பாக ஜமாஅத்தின் இமாமின் சொற்பொழிவு இருந்தது. அது எனக்கு மிகவும் பிடித்திருந்தது. பத்திரிகையாளனாக உலகின் முக்கிய அரசியல், சமுதாய, மார்க்கத் தலைவர்களை சந்திப்பதற்கான வாய்ப்பு எனக்கு கிடைக்கின்றது. மேலும் ஜமாஅத்தின் இமாமையும் சந்தித்தேன். அவர்களை சந்தித்தது எனக்கு மிகவும் நன்றாக இருந்தது. இஸ்லாத்தின் அழகிய போதனைகளை கொலம்பியாவின் மக்களிடம் கொண்டு சேர்க்க அஹ்மதி மிஷனரிகளை அங்கு அனுப்ப வேண்டும் என்பது எனது விருப்பமாகும். எனது நாட்டிற்கு இப்போது அதற்கான பெரும் தேவை உள்ளது.

அடுத்து இதேபோன்று BBS TV உகாண்டாவின் CEO கூறுகின்றார்: நான் இவ்வளவு பெரிய இஜ்திமாவை ஒழுங்குடன் பார்த்து மிகவும் வியந்து விட்டேன். எந்தப் படையும் போலீஸும் இருக்கவில்லை. நான் கிறித்தவனாவேன். இந்தியாவில் இயேசு பற்றிய ஜல்ஸாவின் கண்காட்சியைக் கண்டேன். அங்கு ஒரு ஆர்கனைஸருடன் ஈஸா (அலை) அவர்கள் பற்றிய பேச்சு நடந்தது. அவர் எனக்கு பைபிளின் சான்றை வழங்கி நான் இதற்கு முன்பு கேட்டிராத விஷயங்களைக் கூறினார். அஹ்மதிகளிடம் கிறித்தவர்களை விட அதிகமான பைபிள் அறிவு இருப்பதை எண்ணி வியப்பாக இருந்தது.

அடுத்து போல்யோயாவில் டி.வி நிகழ்ச்சி வழங்குபவர்கள் பெரிய டி.வி நிகழ்ச்சி வழங்குபவர்களின் பிரதிநிதிகள் வந்திருந்தனர். அவர் கூறினார்: வெற்றிகரமான அனுபவமாக இருந்தது. அவரது பெயர் ஆர்ண்டியா சாஹிபாகும். இதற்கு முன்பு எனக்கு கனடா ஜல்ஸா ஸாலானாவிலும் பங்கேற்கும் வாய்ப்பு கிடைத்தது. இந்த ஜல்ஸாக்களில் பங்கேற்று எனக்கு இஸ்லாத்தின் உண்மையான போதனையைப் பற்றி தெரிய வந்தது. ஜல்ஸாவின் சூழல் மற்றும் அதில் நிகழ்த்தப்பட்ட சொற்பொழிவுகள் இஸ்லாம் பற்றிய எனது அனைத்து சந்தேகங்களையும் தப்பெண்ணங்களையும் நீக்கி விட்டது.

உக்ரைனிலிருந்து ஒரு நண்பர் எகர் சாஹிப் மார்க்க அறிஞராவார். Ph.d செய்துள்ளார். அவர் டாக்டர் ஆவார். அவர் கலந்து கொண்டார். இரண்டு நூல்களை இயற்றியுள்ளார். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் நூல்களை விரிவாக ஆய்வு செய்துள்ளார். அவர் ஜல்ஸாவில் பங்கேற்றார். பிறகு அவர் பைஅத்தும் செய்து விட்டார். இவர் உக்ரைன் சமூகத்தின் முதல் அஹ்மதி ஆவார். தனது தாக்கங்களை வெளிப்படுத்தியவாறு கூறுகின்றார்: எனது வாழ்நாளில் எனக்கு பல்வேறு தலைப்புகளில் நடைபெற்ற சமூக நல்லிணக்கக் கூட்டங்கள், மாநாடுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்பு கிடைத்துள்ளது. ஆனால் ஜல்ஸா ஸாலானாவில் கலந்து கொண்டது எனது உள்ளம் மற்றும் ஆன்மாவில் எப்படிப்பட்ட தாக்கத்தை ஏற்படுத்தி விட்டது என்றால் அது வாழ்க்கையிலிருந்து மறுமை வரை மறுமைக்கு செல்லும் வரை மீதம் இருக்கும்.

பிறகு கூறுகின்றார்: அரபி மொழியில் நூர் எனும் ஒரு அழகிய சொல் உள்ளது. அதன் பொருள் ஒளி ஆகும். ஜல்ஸா ஸாலானா ஈமான் மற்றும் அன்பின் அந்த ஒளி ஆகும். அது முழு மனித இனத்தையும் தனது இருப்பால் ஒளிமயமாக்கி விடுகின்றது.

பிறகு கூறுகின்றார்: கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் சொற்பொழிவுகளால் இவ்வுலகில் எனது இருப்பிற்கான அசல் குறிக்கோள் என்ன எனும் விஷயத்தை புரிவதில் உதவியாக இருந்தது. பிறகு ஏற்பாட்டின் பணிகளிலும் அவர் பெரும் தாக்கத்தை வெளிப்படுத்தினார். ஒவ்வொருவரும் கடினமாக உழைப்பதில் தீவிரமாக செயலாற்றினர்.

இதேபோன்று மெக்ஸிகோவின் தாக்கத்தில் ஒன்றைக் கூறி விடுகின்றேன். மாரியா சாஹிபா கூறுகின்றார்:

நான் இஸ்லாத்தை ஏற்று இரண்டு மாதங்களே ஆகின்றன. இஸ்லாம் தொடர்பாக எனக்கு நிறைய கேள்விகள் இருந்தன. ஆனால் ஜல்ஸாவில் கலந்து கொண்டதன் காரணமாக இஸ்லாம் பற்றிய எனது அறிவு அதிகரித்து விட்டது. எனது அனைத்து சந்தேகங்களும் கேள்விகளும் தீர்ந்து விட்டன. இந்த ஜல்ஸாவில் கலந்து கொண்டது ஒரு அடக்க முடியாத உணர்வாகும். ஜல்ஸாவில் கலந்து கொண்டதன் காரணமக எனக்கு நான் ஒரு முஸ்லிமாவேன் என்பதில் பெருமையாக உள்ளது. இன்று நான் இப்பொழுதிலிருந்த எனது பர்தாவை பெருமையோடு அணிவேன். எப்போதும் பயன்படுத்துவேன் என்று உறுதி எடுத்துக் கொள்கிறேன்.

பீராகோபேவின் ஒரு புதிய அஹ்மதி கூறுகின்றார்: தங்களின் சொற்பொழிவு எனக்கு கேட்க மிகவும் நன்றாக இருந்தது. அது பின்பற்றத் தகுந்ததாகும்.

என்னைப் பற்றியும் எனது சொற்பொழிவு பற்றியும் கூறுகின்றார்: எனது கேள்விகளுக்கான பதில்கள் எனக்கு கிடைத்து விட்டன. தங்களின் சொற்பொழிவில் எனது கேள்விகளைக் கவனத்தில் கொண்டு தயார் செய்ததைப் போன்று தோன்றியது. நான் ஆன்மீக ரீதியாக அதிகமான அறிவுகளை என்னுடன் கொண்டு செல்கின்றேன்.

இதுவும் அல்லாஹ்வின் அருளாகும். அவன் இப்படிப்பட்ட சொற்பொழிவுகளை தயார் செய்ய வைக்கின்றான். பிறகு மக்களின் மீது இதன் தாக்கத்தையும் வெளிப்படுத்துகின்றான்.

அடுத்து Press and Media –வின் ரிப்போர்ட்டுகள் உள்ளன. மற்றவைகளை இப்போது விட்டு விடுகின்றேன். இப்போது வரை மொத்தம் 183 மீடியா ரிப்போர்ட்டுகள் நமது Press and Media தலைமையக ரிப்போர்ட்டின் அடிப்படையில் வெளியாகி உள்ளன. மீடியாவின் கவரேஜ் பணிகள் தொடர்கின்றன. இந்த ரிப்போர்ட்டுகளின் மூலமாக 173 மில்லியனை விட அதிகமான மக்கள் வரை தூதுச் செய்தி எட்டியுள்ளது.

கவரேஜ் செய்த மீடியாக்கள், BBC, ரேடியோ 4, BBC World Service, BBC Asian Network, Telegraph, OH National Paper, Sagayi News, ITV, Express Efnikton Bose, SV Asian, EFE News Agency, Spanish News Agency, Yahu News, இன்னும் அதிகமான நாடுகளில் யூ.கே., பிரேசில், ஹாலந்து, ஸ்பெயின், அர்ஜெண்டினா, பனாமா, கொலம்பியா, சிலி, பெனோ வின்ஸ் ஸோவிலா, கேமரூன், நைஜீரியா, பெல்ஜியம், கானா, இத்தாலி போன்ற நாடுகளில் இந்த அனைத்து கவரேஜ்களும் இருந்தன.

MTA ஆப்பிரிக்கா மூலமாக 19 சேனல்களில் கவரேஜ் இருந்தது. அல்ஹம்துலில்லாஹ். இறை அருளால் அதிகமானோர் ஜமாஅத்தின் ஜல்ஸாவுடன் ஜமாஅத் மக்கள் ஜல்ஸாவில் பங்கேற்றது மட்டுமின்றி அந்நியர்களின் அதிகமான தாக்கங்களும் உள்ளன. அதிகமானோர் ஜல்ஸாவின் நாட்களில் இந்த நிகழ்ச்சிகளைப் பார்த்து மிகவும் தாக்கத்திற்குள்ளாகினர்.

அல்லாஹ் ஜல்ஸாவில் கலந்து கொண்ட அஹ்மதிகளுக்கும் இந்த ஜல்ஸா ஸாலானா அவர்களின் ஈமான் அதிகரிக்க கூடியதாக ஆக்குவானாக. எதனை அவர்கள் கேட்டனரோ பார்த்தனரோ அந்த விஷயங்களை எப்போதும் தங்களின் மீது செலுத்திக் கொள்பவர்களாக திகழ்வார்களாக. அதன்படி செயல்படுவர்களாக ஆக்குவானாக. மேலும் பிரஸ் மற்றும் மீடியா மூலமாக உலகிற்கு என்ன செய்திகள் சென்றடைந்தனவோ அவற்றை அல்லாஹ் உள்ளங்களில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாக ஆக்குவானாக. அஹ்மதிய்யத் மற்றும் உண்மை இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளும் காரணியாக அவர்களுக்கு ஆக்குவானாக.

தொழுகைக்குப் பிறகு நான் மதிப்பிற்குரிய முஜிபுர் ரஹ்மான் சாஹிப் அட்வகேட் அவர்களின் ஜனாஸா காயிப் தொழுகையைத் தொழ வைப்பேன். இவர் 30 ஜூலை 2019 –ல் ரப்வாவிலுள்ள Tahir Heart Institute –ல் தமது 85 –வது வயதில் வஃபாத் ஆகி விட்டார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன்.

முஜீபுர் ரஹ்மான் சாஹிப் அல்லாஹ்வின் அருளால் வஸிய்யத் செய்ததிருந்தார்கள். அவர்களின் தந்தை மதிப்பிற்குரிய மவ்லானா நாஸிலுர் ரஹ்மான் சாஹிப் ஜமாஅத்தின் முரப்பியாக இருந்தார்கள். அன்னார் அவர்களை சிறு வயதில் காதியான் அனுப்பி விட்டார்கள். மற்ற பிள்ளைகளை தாயுடன் அனுப்பினார்கள். முஜீபுர் ரஹ்மான் சாஹிப் தாயார் மற்றும் மீதமுள்ள சகோதர சகோதரிகளை பங்களாதேஷிலிருந்து காதியானுக்கு தர்பிய்யத்திற்காக அனுப்பி விட்டார்கள்.

அவர்களின் தந்தையார் ஹாஃபிஸ் ரோஷன் அலி சாஹிப் அவர்கள் முதன்மையான சீடர்களைச் சேர்ந்தவர்களாக இருந்தார்கள். மவ்லானா ஜலாலுத்தீன் சாஹிப் ஷம்ஸ், குலாம் அஹ்மது சாஹிப் பதூம்ஹ்லி போன்ற பெரியோர்கள் அவர்களுடன் படித்தவர்களாவர். அவர்கள் ஏறக்குறைய 36 வருடங்கள் பெங்காலில் கித்மத் செய்துள்ளார்கள். முஜீபுர் ரஹ்மான் சாஹிப் தொழில்ரீதியாக

வக்கீல் ஆக இருந்தார்கள். மிகவும் வெற்றிகரமான வக்கீலாக இருந்தார்கள். அல்லாஹ்வின் அருளால் ஜமாஅத்திற்கும் பெரும் தொண்டாற்றியுள்ளார்கள்.

ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள், அவர்களை 1980 –ல் ராவல்பிண்டி ஜமாஅத்தின் அமீராக நியமித்தார்கள். 1998 வரை இவர்கள் ஜமாஅத்தின் அமீராக இருந்தார்கள். 1974 –ல் மரிரோட்டிலுள்ள ராவல்பிண்டி பள்ளிவாசலின் வழக்கிலும் அவர்கள் பெரும் தொண்டாற்றியுள்ளார்கள். 1978 –ல் டேராகாஸிகானில் மஜ்லிஸே ஷூராவின் Standing Committee –யின் ஊழியராக இருந்தார்கள். பிறகு சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவின் சட்ட ஒழுங்கு அமைக்கும் அமைப்பில் அவர்களுக்கு தொண்டாற்றும் வாய்ப்பு கிடைத்தது.

ஃபிக்ஹா கமிட்டியின் ஊழியராக ஃபிக்ஹா அஹ்மதிய்யா முதல் பாகம் தொகுப்பதில் பங்கேற்கும் வாய்ப்பு கிடைத்தது. பிறகு 1977–78 –ன் ஜல்ஸா ஸாலானாவில் அவர்களுக்கு சொற்பொழிவாற்றும் வாய்ப்பும் கிடைத்தது. இஸ்லாம் மற்றும் மார்க்க சுதந்திரம் எனும் தலைப்பிலும் 1979 முதல் 1983 வரை ஜல்ஸா ஸாலானாக்களில் இஸ்லாத்தில் முரண்பாட்டின் தொடக்கம், ஜமாஅத்தின் தோற்றுனரின் பார்வையில் அஹ்மதி, ஆஃபியத் கா ஹிஸார், ஷஜரே அஹ்மதிய்யத் கே ஷீரீன் ஸமார் போன்ற தலைப்புகளில் சொற்பொழிவாற்றும் வாய்ப்பு கிடைத்தது.

MTA –வின் பல்வேறு நிகழ்ச்சிகளில் அவர்களுக்கு பங்கு பெறும் வாய்ப்பு கிடைத்தது. அந்நியர்களின் ஆட்சேபனைகளுக்கும் பதில் அளித்துள்ளார்கள். மார்க்க அறிவும் பெருமளவில் அவர்களுக்கு இருந்தது. உலக அறிவும் அதிகமாக இருந்தது. இறை அருளால் நன்றாக பேசவும் செய்வார்கள். இதன் அடிப்படையில் ஒரு சிறந்த ஆற்றலை அல்லாஹ் அன்னாருக்கு வழங்கி இருந்தான். அதிலிருந்து அவர்கள் மிகவும் நன்றாக பயனடைந்தார்கள். அல்லாஹ் அவர்களுக்கு ஜமாஅத்திற்கு தொண்டாற்றும் வாய்ப்பை வழங்கினான்.

அடுத்து MTA –வின் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கு பெற்றுள்ளார்கள். 1974 –ல் பாகிஸ்தான் அசம்பிளியின் தீர்ப்பின் மீது ஒரு பார்வை, உலகப் பிரசித்தி பெற்ற வரலாற்றாசிரியர்களுடன் நேர்காணல், பராஹீனே அஹ்மதிய்யா கே முஹாஸின் போன்றவை அதில் அடங்கும். பிறகு 1984 –ல் இம்தினா காதியானிய்யத் அவசரக் கூட்டத்திற்கு எதிராக ஷர்யி நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டது. அதில் வாதாடும் வாய்ப்பு அவர்களுக்கு கிடைத்தது. அங்கும் அவர்கள் நன்றாக அதன் வாதாடும் உரிமையை வழங்கினார்கள். இராணுவ நீதிமன்றத்திலும் வழக்கு நடத்தும் வாய்ப்பு அவர்களுக்கு கிடைத்தது. ஜமாஅத்திற்கு எதிராக என்னென்ன வழக்குகள் இருந்ததோ, அந்த சிறைக்கைதிகளுக்கு தொண்டாற்றும் வாய்ப்பு கிடைத்தது.

அவர்கள் 1993 –ல் உச்ச நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை வழக்கை நடத்திய குழுவில் அங்கம் வகித்தார்கள். அவர்களுக்கு அதிலும் பங்கேற்கும் வாய்ப்பு கிடைத்தது. 1976 –ல் கராச்சியில் நடைபெற்ற போலீஸ் கவுன்ஸிலில் சொற்பொழிவாற்றும் வாய்ப்பு கிடைத்தது. இங்கிலாந்து, ஜெர்மன், சுவிட்ஸர்லாந்து, அமெரிக்கா, கனடா, ஜப்பான் போன்ற நாடுகளில் மனித உரிமைகளின் தலைப்பில் அறிஞர்களுடனும் சட்ட அறிஞர்களுடன் எதிர் சிந்தனையுடையவர்களுடனும் செமினார் போன்றவற்றில் பங்கேற்கும் வாய்ப்பு கிடைத்தது.

அமெரிக்காவின் மனீஸோடாஸ்டீஸ்ட் யுனிவர்சிட்டியில் சட்ட மாணவர்களுக்கு சொற்பொழிவாற்றும் வாய்ப்பு கிடைத்தது. ஜெர்மனியின் ஒரு நீதிமன்றத்தில் 18 மணி நேரங்கள் ஒரு பிரபல சாட்சியாளராக தமது கூற்றைப் பதிவு செய்யும் வாய்ப்பு அவர்களுக்கு கிடைத்தது. 2014 –ல் அமெரிக்க அஹ்மதிய்யா ஜமாஅத்தின் சார்பாக பல்வேறு யுனிவர்சிட்டிகளில் சொற்பொழிவுக்கான ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அங்கு மார்க்க மற்றும் சுதந்திர தலைப்புகளில் அவர்கள் உரை நிகழ்த்தினார்கள்.

பிறகு ராயிஸ் யுனிவர்சிட்டியில் 2017 –ல் திருக்குர்ஆன் கான்ஃபிரன்ஸிற்கான ஏற்பாடு செய்யப்பட்டது. அதில் அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கும் அழைப்பு விடுக்கப்பட்டது. நான் அவர்களை அங்கு அனுப்பினேன். அவர்கள் அங்கு பிரதிநிதியின் கடமையை ஆற்றினார்கள். அங்கும் திருக்குர்ஆனின் சிறப்பை உலகின் முன்னால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் எழுத்துக்களின் ஒளியில் விளக்கும் வாய்ப்பு கிடைத்தது. எண்ணற்ற தொண்டுகளை அவர்கள் ஆற்றியுள்ளார்கள். அல்லாஹ்வின் அருளால் அவர்களின் வக்ஃபின் அடிப்படையில் ஜமாஅத் அவர்களிடம் ஒப்படைத்த அனைத்து பணிகளையும் சிறப்பான முறையில் அதன் உரிமையை நிறைவேற்ற முயற்சி செய்தார்கள்.

அவர்களின் திருமணம் அவர்களின் மாமி மகளுடன் நடைபெற்றது. அவர்களின் மனைவி 1999 –ல் வஃபாத் ஆகி விட்டார்கள். அப்போது அவர்களுக்கு 3 மகன்கள் இருந்தனர். அஸீஸுர் ரஹ்மான் வகாஸ் ராவல்பிண்டியில் அட்வகேட்டாக உள்ளார். அவரும் ஜமாஅத் வழக்கில் உதவி புரிந்து வருகிறார். டாக்டர் அதாவுர்ரஹ்மான் மஆஸ் இப்போது கத்தாரில் உள்ளார். கலீலுர் ரஹ்மான் ஹிமாது சாஹிப் பாகிஸ்தானிலேயே இருக்கின்றார்.

அல்லாஹ் மர்ஹூமுடன் மன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. தனது தேசத்திற்குரியவர்களுடன் இடமளிப்பானாக. தொழுகைக்குப் பிறகு நான் கூறியதைப் போன்று ஜனாஸா தொழுகையைத் தொழ வைப்பேன்.

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தைப் பற்றி அறிந்து கொள்ள:–
www.alislam.org

*(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)*

வணங்கிகள் மற்றும் பலதரப்பட்ட சமுதாய மக்களிடையே தீய நடத்தையின் ஈடுபாடு காணப்பட்டது.

அதன் காரணத்தினாலேயே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் கட்டளைக்கேற்ப அனைவரையும் நோக்கி இவ்வாறு கூறினார்கள்:

قُلْ يٰۤاَيُّهَا النَّاسُ اِنِّيْ رَسُوْلُ اللّٰهِ اِلَيْكُمْ جَمِيْعًا

நீர் கூறுவீராக. மக்களே! நிச்சயமாக நான் உங்களின் எல்லாருக்கும் அல்லாஹ்வின் தூதராக இருக்கின்றேன். (7:159)

ஆக திருக்குர்ஆன் அந்தந்த காலகட்டத்தில் பிறப்பிக்கப்பட்ட அனைத்துப் போதனைகளையும் தன்னகத்தே ஒருங்கிணைத்து வைப்பதும், மேலும் பலதரப்பட்ட நேரத்தில் பலதரப்பட்ட நபிமார்கள் மூலம் பூமியில் வசிப்பவர்களுக்கு விண்ணிலிருந்து எட்ட வைக்கப்பட்ட அந்த அனைத்து சான்றுகளையும் தன்னகத்தே கொண்டிருப்பது அவசியமாகும். திருக்குர்ஆன் அருளப்பட்டதன் நோக்கம் முழு மனித இனத்திற்காகவே ஆகும். ஒரு குறிப்பிட்ட நாட்டிற்காகவோ, சமுதாயத்திற்காகவோ, காலத்திற்காகவோ அல்ல. ஆனால் இன்ஜீலோ (பைபிள்) ஒரு குறிப்பிட்ட சமுதாயத்திற்காகவே அருளப்பட்டது. அதனால்தான் ஈஸா (அலை) அவர்கள் மீண்டும் மீண்டும் இவ்வாறு கூறினார்கள்: ''நான் இஸ்ராயீலின் சமுதாயமான காணாமல்போன அந்த ஆடுகளுக்காகவே அனுப்பப்பட்டுள்ளேன்''

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 72–74, 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

# ஜுமுஆ பேருரை

**அர்ப்பணிப்பு மற்றும் கலப்பற்றத் தன்மையில் தம்மையே மாய்த்துக் கொண்ட பத்ர் போரில் பங்கு பெற்ற நபி (ஸல்) அவர்களின் சஹாபாக்களான ஹஸ்ரத் கத்தாதா பின் நுஃமான் அன்ஸாரி (ரலி) மற்றும் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்ஊன் (ரலி) ஆகியோரின் வாழ்க்கையிலிருந்து ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய சம்பவங்கள்**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **லண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில் 16 ஆகஸ்ட் 2019** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1398 -ஆம் ஆண்டு **ஸஹுர்** மாதம் **16 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ-الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ-اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ-صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

கடந்த பல காலமாக கூறப்பட்டு வருகின்ற பத்ர் சஹாபாக்களின் குறிப்பையே இன்றும் நான் எடுத்துரைப்பேன். இன்று ***ஹஸ்ரத் கத்தாதா பின் நுஃமான் அன்ஸாரி*** சஹாபியைப் பற்றி முதலில் கூறப்படும். ஹஸ்ரத் கத்தாதா அவர்கள் அன்ஸார் கோத்திரத்தின் கஸ்ரஜ் குடும்பமான பனூ ஸஃபரைச் சார்ந்தவர் ஆவார்கள். அன்னாரின் தந்தை பெயர் நுஃமான் பின் ஸைது ஆகும். மேலும் தாயாரின் பெயர் அனீஸா பின்த் கய்ஸ் ஆகும். ஹஸ்ரத் கத்தாதாவின் சுட்டுப்பெயர் அபூ உமர் என்பது மட்டுமல்லாமல் அபூ அம்ர் மற்றும் அபூ அப்தில்லாஹ் என்றும் கூறப்படுகின்றது. ஹஸ்ரத் கத்தாதா, ஹஸ்ரத் அபூஸயீத் குத்ரீ அவர்களின் தாய்வழி சகோதரர் ஆவார்கள். ஹஸ்ரத் கத்தாதா அவர்களுக்கு 70 அன்ஸாரி சஹாபாக்களுடன் பைஅத்தே உக்பாவில் பங்கு பெறும் நற்பாக்கியம் கிடைத்திருந்தது.

எனினும் மற்றோர் அறிவிப்பான அல்லாமா இப்னு இஸ்ஹாக்கின் அறிவிப்பும் உள்ளது. உக்பாவில் பங்கு பெற்ற அன்ஸாரி சஹாபாக்களில் அன்னார் கிடையாது என்று அதில் அவர் குறிப்பிட்டுள்ளார். ஹஸ்ரத் கத்தாதா, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களால் நியமிக்கப்பட்ட அம்பு எய்யும் வீரர்களைச் சார்ந்தவராக இருந்தார்கள். பத்ர், அகழ் மற்றும் அதன் பிறகு நடந்த ஏனைய அனைத்து போர்களிலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடன் இணைந்து பங்கு பெறும் நற்பாக்கியம் அன்னாருக்கு கிடைத்தது. உஹது போர் நாள் அன்று ஹஸ்ரத் கத்தாதா அவர்களின் கண்களின் மீது அம்பு பட்டது. அதனால் அன்னாரின் கண்ணின் விழி, வெளியே வந்து விட்டது.

அன்னார், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடத்தில் சென்று, அல்லாஹ்வின் தூதர் அவர்களே! இந்த அம்பு பட்டது. அதனால் எனக்கு கண் விழி வெளியே வந்து விட்டது. நான் என் மனைவியை மிகவும் நேசிக்கிறேன். அவர் எனது கண்ணை இவ்வாறு பார்த்தால் அவர் என்னை வெறுக்கத் துவங்கி விடுவாரோ என நான் அஞ்சுகிறேன் எனவும் கூறினார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் தனது கரத்தால் அந்த விழியை திரும்ப அதன் இடத்தில் பதித்து விட்டார்கள். அது சரியான இடத்தில் நிலை பெற்று விட்டது. மேலும் கண் பார்வையும் திரும்பியது. முதுமையிலும் கூட இரண்டு கண்களில் இந்தக் கண் மிகவும் ஆற்றல் வாய்ந்ததாகவும் சரியானதாகவும் இருந்தது. ஓர் அறிவிப்பில் வருகின்றது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அக்கண்ணில் தனது உமிழ்நீரைத் தடவினார்கள். அதன் விளைவாக இரண்டு கண்களில், அந்தக் கண் மிகவும் அழகு வாய்ந்ததாக ஆகி விட்டது.

(அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅது தொகுதி 3 பக்கம் 239 – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் கத்தாதா அவர்கள் சுயமே அந்த சம்பவத்தை விளக்கமாக அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு வில் ஒன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டது. அதனை உஹது போர் நாளன்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் எனக்கு வழங்கினார்கள். நான் அதன் மூலமாக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு முன்பு அம்பை எய்து கொண்டிருந்தேன். எந்த அளவுக்கு என்றால், வில்லின் கயிறு அறுந்து போனது. அதன் பிறகும் நான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அருளுக்குரிய முகத்திற்கு முன்னால் நின்று கொண்டேன். பொதுவாக ஹஸ்ரத் தல்ஹா அவர்களைப் பற்றி கூறப்படுவதுண்டு.

ஆனால், தான் முன்னால் நின்றதாக அறிவிக்கின்றார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களை நோக்கி எந்த அம்பு வந்தாலும் நான் தலையை அதற்கு முன்னால் வைத்து விடுவேன். இவ்வாறு நான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அருளுக்குரிய முகத்தின் கேடயமாகி விட வேண்டும் என்பதற்காக நான் அவ்வாறு செய்தேன். இதற்கிடையில் ஓர் அம்பு எனது கண்ணில் பாய்ந்தது. அதனால் எனது கண்ணிலிருந்து விழி பிதுங்கி எனது கன்னத்திற்கு வந்து விட்டது. மேலும் படையும் சிதறுண்டது.

மேலும் அன்னார் கூறுகின்றார்கள்: நான் எனது கரத்தால் அந்த விழியைப் பிடித்துக் கொண்டேன். அதன் மீது என் கரத்தை வைத்தவனாக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் சென்றேன். அதனை அங்கேயே கொண்டு சென்றேன்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் எனது கரங்களில் அதனைக் கண்டபோது அன்னாரின் கண்களிலிருந்து கண்ணீர் வந்தது. மேலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வே! கத்தாதா தனது முகத்தின் மூலமாக உனது நபியின் முகத்தைப் பார்த்துள்ளார். எனவே நீ அவரது இந்தக் கண்ணை இரண்டு கண்களிலும் மிகவும் அழகு வாய்ந்ததாகவும், மிகவும் பார்வை கொண்டதாகவும் ஆக்குவாயாக. எனவே இரண்டு கண்களில் அந்தக் கண் மிகவும் அழகு வாய்ந்ததாகவும், பார்வையின் அடிப்படையில் அந்தக் கண்ட மிகவும் கூர்மையானதாகவும் இருந்தது.

(அல் மஜ்மவுல் கபீர் லித்திப்ரானீ தொகுதி 19 பக்கம் 8 உமர் பின் கத்தாதா – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாவுத் தராஸில் அச்சிடப்பட்டது)

இதனை அன்னார் சுயமாகவே அறிவித்துள்ளார்கள். தனது மனைவியின் மீது அன்பு உள்ளது. மனைவி என்னை வெறுத்து விடுவார் என்றெல்லாம் இந்த அறிவிப்பில் எழுதப்படவில்லை. முதலில் கூறிய சம்பவத்தை வரலாற்று ஆய்வாளர்கள் எழுதியுள்ளனர். அதாவது சம்பவத்தில் சுவராஸ்யம் ஏற்படுவதற்காக அல்லது ஏதோ காரணத்திற்காக இந்த விஷயத்தை சம்பவத்தில் இணைத்துக் கொண்டனர். எவ்வாறிருப்பினும், இந்த அறிவிப்பில் மனைவி தொடர்பான விஷயம் எதுவும் வரவில்லை. ஆனால், போரின்போது கண் வெளியே வந்தது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள்

அதனை திரும்ப அந்த இடத்திலேயே வைத்து விட்டார்கள். அது மீண்டும் சரியான நிலையை அடைந்தது. அன்னாரது கண் பார்வை மேலும் நல்லதாக ஆனது. அதன் காரணமாக பிற்காலத்தில் ஹஸ்ரத் கத்தாதா அவர்கள் கண்ணுடையவர் என்ற சுட்டுப் பெயரால் மிகவும் பிரபல்யமானார்கள்.

(அல் அஸாபா ஃபீ தமீஸுஸ் சஹாபா தொகுதி 2 பக்கம் 345 – 2005 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் கத்தாதா அகழ்ப்போர் மற்றும் ஏனைய அனைத்து போர்களிலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடன் இணைந்து பங்கு பெற்றார்கள். மக்கா வெற்றியின்போது பனூ ஸஃபர் கோத்திரத்தின் கொடி ஹஸ்ரத் கத்தாதா அவர்களின் கரத்தில் இருந்தது. ஹஸ்ரத் கத்தாதா அவர்கள் தமது 65 வயதில் ஹிஜ்ரி 23 ஆம் ஆண்டில் மரணமடைந்தார்கள். ஹஸ்ரத் உமர் அவர்கள் மதீனாவில் அன்னாரின் ஜனாஸா தொழுகையைத் தொழ வைத்தார்கள். அன்னாரின் தாய்வழி சகோதரர் ஹஸ்ரத் அபூ ஸயீத் குத்ரீ, முஹம்மது பின் முஸ்லிமா மற்றும் ஹாரிஸ் பின் ஹஸாமா ஆகியோர் கபரில் இறங்கினார்கள். ஓர் அறிவிப்பின் அடிப்படையில் ஹஸ்ரத் உமர் அவர்களும் மண்ணறையில் இறங்கிய நபர்களில் ஒருவர் ஆவார்கள். ஹஸ்ரத் கத்தாதா அவர்களின் மகன்வழிப் பேரன்களில் ஒருவரின் பெயர் ஆஸிம் பின் உமர் ஆகும். அவர் குடும்பங்கள், கோத்திரங்கள் மற்றும் வாரிசுகளைப் பற்றிய அறிவுப் புலமை பெற்றவராக இருந்தார். அவரிடமிருந்து அல்லாமா இப்னு இஸ்ஹாக் ஏராளமான அறிவிப்புகளைச் செய்துள்ளார்.

(அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅது தொகுதி 3 பக்கம் 239 – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாவுத் தராஸில் அச்சிடப்பட்டது)

ஓர் அறிவிப்பில் உள்ளது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடத்தில் வில் ஒன்று இருந்தது. அதன் பெயர் குதூன் ஆகும். மேலும் அம்புகள் தயாரிக்கப்படும் நபா என்ற மரத்தால் அது தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த வில் தான் உஹது நாளன்று ஹஸ்ரத் கத்தாதா அவர்களின் கரத்தில் அதிக பயன்பாட்டின் காரணமாக உடைந்து போனது.

(லுகாத்துல் ஹதீஸ் தொகுதி 4 பக்கம் 293 – 2005 ஆம் ஆண்டு லாஹூரிலுள்ள ஆஸிஃப் அச்சகத்தில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் கத்தாதா பின் நுஃமான் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: அன்ஸார்களில் பனூ உபைரக் என்றழைக்கப்பட்ட ஒரு குடும்பம் இருந்தது. அதில் பஷீர், புஷைர் மற்றும் முபஷ்ஷீர் என மூன்று சகோதரர்கள் இருந்தனர். புஷைர் என்பவன் நயவஞ்சகனாக இருந்தான். அவன் கவிதைகள் கூறி வந்தான். கவிதைகள் மூலமாக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் சஹாபாக்களை கிண்டல் செய்து வந்தான். அவன் வெளிப்படையில் முஸ்லிமாக இருந்தான். ஆனால் அவனது சில செயல்கள் அவ்வாறிருக்கவில்லை. இன்ன இன்ன அரபிகள் சஹாபாக்களைப் பற்றி இப்படி இப்படியெல்லாம் கூறுகின்றனர் என தனது கவிதைகளில் அவன் கூறுவான்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் சஹாபாக்கள் அந்தக் கவிதைகளைக் கேட்டபோது, அல்லாஹ்வின் மீது ஆணையாக! இது தீய உள்ளம் கொண்ட இப்னு உபைரக் கூறிய கவிதைகள் ஆகும் என சஹாபாக்கள் கூறினர். அந்த தீயவர்கள் அறிவீனமான காலக்கட்டத்திலும் இஸ்லாம் வந்த பிறகும், வறுமையிலும் பசி பட்டினியிலும் இருந்தார்கள். அவர்களிடத்தில் எந்த மாறுதலும் ஏற்பட்டிருக்கவில்லை, வேலை எதுவும் செய்ததில்லை. அல்லது உழைக்கமாட்டார்கள். அதன் காரணமாக மிகவும் வறுமையில் இருந்தார்கள்.

தொடர்ந்து அன்னார் அறிவிக்கின்றார்கள்: மதீனாவில் பொதுவாக பேரீச்சம்பழம் மற்றும் கோதுமையையே உணவாக உண்டு வந்தனர். தானியங்களின் வியாபாரி எவராவது சிரியாவிலிருந்து வெள்ளை நிற கோதுமையைக் கொண்டு வந்தால் அரைக்கப்பட்ட மெல்லிய கோதுமையை செல்வந்தரான நபர்கள் அவரிடமிருந்து விலைக்கு வாங்கிக் கொள்வார்கள். மேலும் அதனை தங்களது சிறப்பான உணவாக ஆக்கிக் கொள்வார்கள். ஆனால் அந்த நபரின் மனைவி மக்கள் பேரீச்சம்பழத்தையும் சாதாரண கோதுமையையுமே உணவாக உண்டு வருவர்.

அவர்கள் கூறுகின்றார்கள்: ஒருமுறை என்ன நடந்தது என்றால் ஒரு தானிய வியாபாரி சிரியாவிலிருந்து வந்தார். அப்போது எனது சிறிய தந்தை ரிஃபா பின் ஸைது அவர்கள் ஒரு மூடை அந்த வெள்ளை நிற மைதாவினை விலைக்கு வாங்கினார்கள். மேலும் அதனை தனது குடோனில் வைத்து விட்டார்கள். அங்கு ஆயுதங்களும், வாள்களும், இரும்பு அணிகலன்களும் வைக்கப்பட்டிருந்தன. அன்னார் மீது அநீதியிழைக்கப்பட்டதாக அவர்கள் கூறுகின்றார்கள். அந்த குடோன் கொள்ளயடிக்கப்பட்டது. சுவரை உடைத்து உள்ளே திருடர்கள் நுழைந்தனர். ரேஷன் பொருட்கள் மற்றும் ஆயுதங்கள் அனைத்தும் திருடப்பட்டன.

காலை நேரத்தில் எனது சிறிய தந்தையார் என்னிடம் வந்து கூறினார்கள். எனது அண்ணன் மகனே! இன்று இரவு என் மீது பெரும் அநீதியிழைக்கப்பட்டு விட்டது. நமது குடோனில் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. நமது ரேஷன் பொருள்களும் ஆயுதங்கள் அனைத்தும் திருடப்பட்டு விட்டன என்று கூறினார்கள். நாங்கள் தெருவாசிகளிடம் அறிந்து கொள்ள முயற்சி செய்தோம். மேலும் மக்களிடம் விசாரித்தோம். அப்போது நாங்கள் பனூ உபைரக்கை இன்று இரவு பார்த்தோம். அவர் நெருப்பை மூட்டி வைத்திருந்தார். உங்களது உணவின் மீதே அவர் மகிழ்ச்சி அடைந்து கொண்டிருந்தார் என்பது எங்களது எண்ணமாகும் என மக்கள் எம்மிடம் கூறினர்.

அதாவது திருடப்பட்ட பொருளை சமைத்து உண்டு கொண்டிருந்தார்கள் என்பது அதன் பொருளாகும். நாங்கள் தெருவாசிகளிடம் விசாரித்துக் கொண்டிருந்தபோது பனூ உபைரக், அல்லாஹ்வின் மீது ஆணையாக! லுபைத் பின் சஹ்ல் தான் திருடியிருப்பார் என நாங்கள் கருதுகிறோம் எனக் கூறினான். அதாவது, தான் குற்றம் செய்து விட்டு வேறொரு நபர் மீது பழிசுமத்தி விட்டான்.

அறிவிப்பாளர் கூறுகின்றார்: லுபைத் எங்களில் ஒரு சாதாரண மனிதர். மேலும் அவர் முஸ்லிமாக இருந்தார்கள். தன் மீது பனூ உபைரக் திருட்டுப்பழி சுமத்தியுள்ளார் என்பது தெரிய வந்தபோது லுபைத் (லபீத்) தனது வாளை உருவி நான் திருடனா? எனக் கேட்டார். இறைவன் மீது ஆணையாக! ஒன்று இந்த வாள் உம் மீது பாயும் அல்லது நீ திருட்டைக் கண்டுபிடித்து கொடுக்க வேண்டும் என மிகவும் கோபத்துடன் இப்படித்தான் தீர்மானிக்கப்படும் என லபீத் கூறினார். அப்போது சகோதரரே! உங்களது வாளை விலக்கி வையுங்கள். நீங்கள் திருடர் அல்ல. நீங்கள் மிகவும் நல்ல மனிதர் ஆவீர்கள் என்பதே எமது நம்பிக்கையாகும்.

நாங்கள் தெருவாசிகளிடம் மேலும் விசாரித்தபோது பனூ உபைரக்தான் திருடர் என்பதில் எங்களுக்கு எந்த சந்தேகமும் எஞ்சியிருக்கவில்லை. அப்போது எனது சிறிய தந்தையார் அவர்கள், எனது அண்ணன் மகனே! நீ ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடத்தில் சென்று நடந்த சம்பவத்தைப் பற்றி கூறினால் எனது பொருள் எனக்கு ஒருவேளை திரும்பக் கிடைத்து விடலாம் என என்னிடம் கூறினார்கள்.

ஹஸ்ரத் கத்தாதா பின் நுஃமான் கூறுகின்றார்கள்: நான் அதனை கேட்டு விட்டு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் சென்றேன். மேலும் நமது மக்களில் ஒரு குடும்பத்தினர் அநீதியிழைத்துள்ளனர். அவர்கள் எனது சிறிய தந்தையான ரிஃபா பின் ஸைதின் வீட்டிற்குச்

சென்று அன்னாரின் குடோனிலிருந்து ஆயுதங்கள் மற்றும் ரேஷன் பொருட்களை கொள்ளையடித்துச் சென்று விட்டனர். எங்களது ஆயுதங்கள் எங்களுக்கு திரும்பக் கொடுக்கப்பட வேண்டும் என நாங்கள் விரும்புகிறோம் என நான் கூறினேன். ரேஷன் பொருட்கள் அல்லது தானியத்தைப் பொருத்தவரையில் அது எமக்கு தேவையில்லை என்றும் கூறினேன்.

அதற்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நான் இது தொடர்பாக ஆலோசனை செய்து விட்டு ஒரு தீர்ப்பை வழங்குவேன் எனக் கூறினார்கள். இவ்விஷயம் பனூ உபைரக் செவியுற்றதும் தனது சமுதாயத்தின் உஸைர் பின் உர்வா என்ற நபரிடத்தில் அவன் சென்றான். அவர் இவரிடத்தில் இந்த விவகாரம் தொடர்பாகப் பேசினார். தெருவாசிகளில் சிலரும் அவருடன் இவ்விவகாரத்தில் சேர்ந்து கொண்டனர். அவர்கள் அனைவரும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடத்தில் சென்று, அல்லாஹ்வின் தூதர் அவர்களே! கத்தாதா பின் நுஃமான் மற்றும் அன்னாரது சிறிய தந்தை இருவரும் முஸ்லிமும், நன் மக்களுமான எமது மக்களில் ஒரு குடும்பத்தினர் மீது எந்த சாட்சியும், ஆதாரமுமின்றி திருட்டுப்பழி சுமத்துகின்றனர் எனக் கூறினார்.

ஹஸ்ரத் கத்தாதா அவர்கள் கூறுகின்றார்கள்: நான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் சென்று அன்னாரிடம் பேசினேன். அப்போது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் முஸ்லிம்கள், நன் மக்கள் எனக் கூறப்படும் ஒரு குடும்பத்தினர் மீது நீங்கள் திருட்டுப்பழி சுமத்தியுள்ளீர்கள். மேலும் உங்களிடத்தில் அதற்கான சாட்சியம் மற்றும் ஆதாரம் எதுவும் இல்லை என்று என்னிடம் கூறினார்கள்.

ஹஸ்ரத் கதாதா கூறுகின்றார்கள்: நான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடமிருந்து திரும்பி விட்டேன். அன்னார் நல்லியல்பு கொண்ட மிக நல்லவராக இருந்தார்கள்.

கத்தாதா கூறுகின்றார்கள்: நான் திரும்பி வந்து விட்டேன். எனினும் நான் எனது செல்வத்தை இழந்திருந்தாலும் பரவாயில்லை. ஆனால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் இவ்விவகாரம் தொடர்பானது எதுவும் பேசியிருக்கக் கூடாது என எனது உள்ளம் எண்ணியது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் கூற்றைக் கேட்ட பிறகு நான் தேவையின்றி அன்னாருக்கு துன்பம் கொடுத்து விட்டேன் என்ற எண்ணம் எனக்கு தோன்றியது. எனது செல்வம் கிடைக்காமல் போயிருந்தாலும் பரவாயில்லை. நான் இதனை பேசியிருக்கக் கூடாது என எண்ணினேன். பின்னர் எனது சிறிய தந்தை என்னிடம் வந்து, எனது அண்ணன் மகனே! நீ இவ்விகாரத்தில் இதுவரை என்ன செய்துள்ளாய் எனக் கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் வழங்கிய பதிலை அன்னாரிடம் கூறினேன். அப்போது அன்னார் அல்லாஹ்வே! நமது உதவியாளன் என்று கூறினார்கள். நாங்கள் இவ்வாறு கூறி சில காலமே கழிந்திருக்கும்.

إِنَّآ أَنْزَلْنَآ إِلَيْكَ الْكِتَابَ بِالْحَقِّ لِتَحْكُمَ بَيْنَ النَّاسِ بِمَآ أَرَاكَ اللهُ وَلَا تَكُنْ لِلْخَآئِنِيْنَ خَصِيْمًا

பொருள்: நாம் உமக்குக் கற்றுத் தந்ததைக் கொண்டு, மக்களிடத்தில் தீர்ப்பு வழங்குவதற்காக, நிச்சயமாக நாமே உண்மையைக் கொண்டு இவ்வேதத்தை உமக்கு இறக்கினோம். நீர் நம்பிக்கைத் துரோகிகளுக்காக வாதாட வேண்டாம்.

إِنَّ اللهَ كَانَ غَفُوْرًا رَّحِيْمًا

நிச்சயமாக அல்லாஹ் மிக்க மன்னிப்பவனும், மேன்மேலும் கருணை காட்டுபவனும் ஆவான். **(4:106,107)**

அடுத்து அல்லாஹ் கூறுகின்றான்: தம்மைத் தாமே ஏமாற்றிக் கொள்பவர்களின் சார்பாக நீர் வாதிட வேண்டாம். நிச்சயமாக நம்பிக்கைத் துரோகிகளையும் பெரும் பாவிகளையும் அல்லாஹ் நேசிப்பதில்லை.

அவர்கள் மக்களிடமிருந்து மறைத்துக் கொள்ள விரும்புகின்றனர். அல்லாஹ்விடமிருந்து மறைத்துக் கொள்ள நாடவில்லை. ஆனால் அவன் விரும்பாதவை பற்றிச் சூழ்ச்சி செய்வதில் அவர்கள் இரவைக் கழிக்கும்போது கூட, அவன் அவர்களுடன் இருக்கின்றான். மேலும் அல்லாஹ் அவர்கள் செய்பவற்றை அழிப்பவனாவான்.

தெரிந்து கொள்ளுங்கள்! அவர்களுக்காக இவ்வுலக வாழ்க்கையில் வாதிடுவோர் நீங்களே. ஆனால் மறுமை நாளில் அவர்களுக்காக அல்லாஹ்விடம் வாதிடுபவரோ, அவர்களின் பாதுகாவலராக இருப்பவரோ எவர்?

ஒருவர் தீமை செய்யவோ, தமக்குத் தாமே தீங்கிழைக்கவோ செய்த பின்னர் அல்லாஹ்விடம் பாவமன்னிப்பைக் கோரினால், அவர் அல்லாஹ்வை மிக்க மன்னிப்போனும், மேன்மேலும் கருணை காட்டுபவனுமாகக் காண்பார். **(4:108–111)**

அடுத்து அல்லாஹ் கூறுகின்றான்:

وَمَنْ يَّكْسِبْ إِثْمًا فَإِنَّمَا يَكْسِبُهُ عَلٰى نَفْسِهٖ وَكَانَ اللهُ عَلِيْمًا حَكِيْمًا ۔ وَمَنْ يَّكْسِبْ
خَطِيْٓئَةً أَوْ إِثْمًا ثُمَّ يَرْمِ بِهٖ بَرِيْٓئًا فَقَدِ احْتَمَلَ بُهْتَانًا وَّإِثْمًا مُّبِيْنًا

பொருள்: பாவம் செய்யும் ஒருவர் அச்செயலைத் தமக்கு எதிராகவே செய்கிறார். அல்லாஹ் நன்கு அறிபவனும் நுண்ணறிவுடையோனுமாவான்.

ஒருவர் ஒரு தவற்றையோ அல்லது பாவத்தையோ செய்து விட்டு, அதனைக் குற்றமற்ற ஒருவரின் மேல் சுமத்தினால், நிச்சயமாக அவர் பொய்க் குற்றச்சாட்டையும், தெளிவான பாவத்தையும் சுமக்கிறார். **(4:112,113)**

இதில் பனூ உபைரக் கூறிய இக்கூற்றினை சைகையாக கூறப்பட்டுள்ளது. அதாவது இந்த திருட்டை லபீத் பின் சஹ்ல்தான் செய்திருப்பார் என எங்களுக்கு தோன்றுகிறது என அவன் கூறியிருந்தான். அதுவே இவ்வசனத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

பின்னர் அல்லாஹ் கூறுகின்றான்:

وَلَوْلَا فَضْلُ اللهِ عَلَيْكَ وَرَحْمَتُهٗ
لَهَمَّتْ طَّآئِفَةٌ مِّنْهُمْ أَنْ يُّضِلُّوْكَ وَمَا يُضِلُّوْنَ إِلَّآ أَنْفُسَهُمْ وَمَا يَضُرُّوْنَكَ مِنْ شَيْءٍ وَأَنْزَلَ اللهُ
عَلَيْكَ الْكِتَابَ وَالْحِكْمَةَ وَعَلَّمَكَ مَا لَمْ تَكُنْ تَعْلَمُ وَكَانَ فَضْلُ اللهِ عَلَيْكَ عَظِيْمًا ۔ لَا خَيْرَ فِيْ كَثِيْرٍ
مِّنْ نَّجْوٰهُمْ إِلَّا مَنْ أَمَرَ بِصَدَقَةٍ أَوْ مَعْرُوْفٍ أَوْ إِصْلَاحٍ بَيْنَ النَّاسِ وَمَنْ يَّفْعَلْ ذٰلِكَ ابْتِغَآءَ
مَرْضَاتِ اللهِ فَسَوْفَ نُؤْتِيْهِ أَجْرًا عَظِيْمًا ۔

அல்லாஹ்வின் அருளும், அவனது கருணையும் உம்மிடத்து இல்லாதிருப்பின் (எதிரிகள் வெற்றி பெற்றிருப்பர். ஏனெனில்) அவர்களில் ஒரு பிரிவினர் உம்மை அழித்து விட நாடினர். அவர்கள் தங்களையே தவிர வேறெவரையும் அழிப்பதில்லை. அவர்கள் உமக்கு எந்தத் தீங்கும் செய்ய முடியாது. அல்லாஹ் உம்மிடத்து வேதத்தையும், ஞானத்தையும் இறக்கி நீர் அறியாதவற்றை உமக்குக் கற்றுக் கொடுத்தான். மேலும் அல்லாஹ்வின் (மா)பெரும் அருள் உம்மிடத்து உள்ளது.

தருமச் செயல்களையோ, நற்காரியங்களையோ, மக்களுக்கிடையே சமாதானத்தை ஏற்படுத்துவதையோ கொண்டு ஏவுகின்றவர்(களின் ஆலோசனை)களைத் தவிர்த்து, அவர்களின் ஆலோசனைகளுள் பெரும்பாலானவற்றில் எந்த நன்மையுமி(ருப்பதி)ல்லை. அல்லாஹ்வின் விருப்பத்தினைப் பெறுவதற்காக, அதனைச் செய்பவருக்கு நாம் மிக விரைவில் மகத்தான நற்பலனை வழங்குவோம். **(4:114,115)**

ஆக, இவ்வசனங்களுக்கு எவ்வாறிருப்பினும் இன்னும் நிறைய விளக்கங்கள் உள்ளன. எனினும் இந்த சம்பவம் தொடர்பான பொருள் எடுக்கப்பட்டால் இந்த வசனங்கள் இறங்கிய சிறிது

காலத்திற்குப் பிறகு இந்த அனைத்து வசனங்களும் நமது விவகாரம் தொடர்பாகவே இறங்கியுள்ளன என அவர்கள் எண்ணினர். அல்லாஹ் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு அதன் உண்மைத்துவத்தை தெளிவுபடுத்தி விட்டான். எனவே அதன் பிறகு அதன் தாக்கமும் எப்படி ஏற்பட்டது என்றால் பனூ உபைரக் என்ற எந்த நபரின் மீது திடியிருப்பார்கள் என்ற சந்தேகம் இருந்ததோ அவர்கள் இவ்வசனங்கள் தம்மைக் குறித்ததே ஆகும் என்பதை புரிந்து கொண்டனர். அவர்கள் தமது திருட்டை ஒப்புக் கொண்டனர். ஆயுதங்களை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் எடுத்து வந்தனர். பின்னர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அதன் உரிமையாளரான ரிஃபாவிடம் அதனை ஒப்படைத்து விட்டார்கள்.

ஹஸ்ரத் கதாதா கூறுகின்றார்கள்: எனது சிறிய தந்தை முதியவராக இருந்தார்கள். இஸ்லாத்தை ஏற்பதற்கு முன்பாக அறிவீனமான காலக்கட்டத்தில் அன்னாரின் கண் பார்வை குறைபாடு உள்ளது என நான் எண்ணி இருந்தேன். ஆனால் நான் ஆயுதங்களை எடுத்துக் கொண்டு எனது சிறிய தந்தையாரிடம் சென்றபோது, அன்னார் எனது அன்பு மகனே! இதனை நான் அல்லாஹ்வின் வழியில் தருமம் செய்து விடுகிறேன் என்று கூறினார்கள். அப்போது எனக்கு தெரிய வந்தது. மேலும் சிறிய தந்தை மிக உறுதியுடனும், சரியாகவும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டுள்ளார்கள் என்று நம்பினேன். மேலும் அன்னாரின் ஈமான் உறுதியானதல்ல என நான் வீணாக சந்தேகம் கொண்டேன் என்பதும் புரிந்தது.

திருக்குர்ஆனின் இவ்வசனங்கள் இறங்கியதும், அவர்களின் ஒரு சகோதரரான புஷைர் என்பவன் இணை வைப்பவர்களுடன் சேர்ந்து கொண்டான். மேலும் சலாஃபா பின்த் சஅத் என்பவரிடம் சென்று தங்கினான். புஷைரிடம் நயவஞ்சகத்தன்மை இருந்ததாக ஏற்கனவே கூறியிருந்தனர். அந்த சந்தர்ப்பத்தில் இந்த வசனம் இறங்கியது.

وَمَنْ يُّشَاقِقِ الرَّسُوْلَ مِنْ بَعْدِ مَا تَبَيَّنَ لَهُ الْهُدٰى وَيَتَّبِعْ
غَيْرَ سَبِيْلِ الْمُؤْمِنِيْنَ نُوَلِّهٖ مَا تَوَلّٰى وَنُصْلِهٖ جَهَنَّمَ وَسَآءَتْ مَصِيْرًا ۔ اِنَّ اللّٰهَ لَا يَغْفِرُ اَنْ يُّشْرَكَ بِهٖ
وَيَغْفِرُ مَا دُوْنَ ذٰلِكَ لِمَنْ يَّشَآءُ وَمَنْ يُّشْرِكْ بِاللّٰهِ فَقَدْ ضَلَّ ضَلٰلًا بَعِيْدًا

பொருள்: நேர்வழி தமக்குத் தெளிவாகத் தெரிந்த பின்னர், இத்தூதரை எதிர்த்து, நம்பிக்கை கொண்டோருடையதல்லாத வழியைப் பின்பற்றுகின்றவரை, நாம் அவர் செல்லும் வழியிலே அவரைச் செல்லவிட்டு, அவரை நரகில் போடுவோம்; அது மிகக் கெட்ட தங்குமிடமாகும்.

அல்லாஹ் தனக்கு இணையாக எதையும் ஆக்கிக் கொள்வதை ஒருபோதும் மன்னிக்க மாட்டான். இதை விடக் குறைந்ததை, தான் நாடியவருக்கு மன்னிப்பான். அல்லாஹ்வுக்கு எதையாவது இணையாக ஆக்குகின்றவன், (நேரான பாதையிலிருந்து) வெகு தூரம் சென்று விட்டான் (எனப் புரிந்து கொள்ளுங்கள்). (4:116,117)

சலாஃபா என்ற இணை வைப்பவருடன் சென்று தங்கியபோது அவன் இஸ்லாத்தை விட்டு விலகினான். அப்போது ஹஸ்ரத் ஹஸ்ஸான் பின் சாபித் அவர்கள் தனது சில கவிதைகளின் மூலம் அவரின் துர்பாக்கியத்தை விளக்கினார்கள். இதைக் கேட்ட சலாஃபா பின்த் என்ற பெண்மணி அந்த நபரின் பொருட்களைச் சுமந்து கொண்டு வீட்டை விட்டு வெளியேறினார். மேலும் அதனை ஒரு மைதானத்தில் வீசி விட்டு வந்து விட்டார். பின்னர் அவர் அவனிடம், நீ எனக்கு ஹஸ்ஸான் அவர்களின் கவிதையை அன்பளிப்பாக வழங்கி விட்டீர். அதாவது அவர் உனக்காக இந்த கவிதைகளை எழுதினார். அதனால் நானும் அதில் சேர்ந்து கொண்டேன். உன்னால் எனக்கு எந்தப் பயனும் கிடைக்கப் போவதில்லை.

(சுனன் திர்மிதி அப்வாபுத் தஃப்ஸீருல் குர்ஆன்... ஹதீஸ் எண் 3036)

எனவே நான் உனது பொருட்களை வைக்க மாட்டேன் என அந்தப் பெண்மணி கூறி விட்டார். எனவே அந்த நயவஞ்சகன் அல்லது இணை வைத்தவனின் முடிவு இவ்வாறாயிற்று.

பின்னர் ஹஸ்ரத் அபூ ஸயீத் குத்ரீ இடமிருந்து அறிவிப்பு இவ்வாறு உள்ளது. அதாவது ஹஸ்ரத் கத்தாதா பின் நுஃமான் அவர்கள் ஒருமுறை அதிகாரம் இக்லாஸை இரவு முழுவதும் ஓதிக் கொண்டிருந்தார்கள். அதுபற்றி ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு முன் கூறப்பட்டபோது, எந்த வல்லமையின் கரத்தின் எனது உயிர் உள்ளதோ அவன் மீது ஆணையாக! அதிகாரம் இக்லாஸ் திருக்குர்ஆனில் பாதி அல்லது மூன்றில் ஒரு பங்கு ஆகும் என ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(முஸ்னது அஹ்மது பின் ஹம்பல் தொகுதி 4 பக்கம் 42 ஹதீஸ் எண் 11131 – 1998 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அதாவது அல்லாஹ்வின் ஏகத்துவம்தான் உண்மையான திருக்குர்ஆன் ஆகும். மேலும் திருக்குர்ஆனில் அதற்கான போதனையே வழங்கப்பட்டுள்ளது.

அபூ ஸல்மா அறிவிக்கின்றார். ஹஸ்ரத் அபூஹுரைரா எங்களிடம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் ஹதீஸ்களைக் கூறி வந்தார்கள். ஒருமுறை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஜுமுஆ நாளன்று ஒரு நேரம் வருகின்றது. ஒரு முஸ்லிம் தொழுது கொண்டிருக்கும் நிலையிலும் அல்லாஹ்விடம் நன்மையை வேண்டுபவராகவும் அந்நேரத்தை கழித்தால் அல்லாஹ் அவர் வேண்டிய விஷயத்தை நிச்சயமாக வழங்கி விடுவான். மேலும் ஹஸ்ரத் அபூஹுரைரா அவர்கள் தனது கரத்தால் அது மிகக் குறுகிய நேரம் ஆகும் என்று சைகை செய்து கூறினார்கள்.

ஹஸ்ரத் அபூஹுரைராவின் மரணம் நிகழ்ந்ததும் அறிவிப்பாளர் கூறுகின்றார்: இறைவன் மீது ஆணையாக! நான் ஹஸ்ரத் அபூ ஸயீத் குத்ரீ அவர்களிடத்தில் சென்றால் அவரிடத்தில் நிச்சயமாக அந்நேரத்தைக் குறித்துக் கேட்பேன் என நான் எனது உள்ளத்தில் எண்ணினேன். அவர்கள் ஒருவேளை அது குறித்து அறிந்திருக்கலாம் எனவும் எண்ணினேன்.

எனவே ஒருமுறை நான் அன்னாரிடம் சென்றேன். அப்போது அன்னார் சில கம்புகளை சீர் செய்து கொண்டிருந்தார்கள். அபூ ஸயீத் அவர்களே! இது என்ன கம்புகள் எனக் கேட்டேன். இவை எப்படிப்பட்ட கம்புகள் என்றால் அல்லாஹ் இதில் நமக்கு பரக்கத்தை வைத்துள்ளான். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இதனை மிகவும் விரும்பினார்கள். இதனை பிடித்துக் கொண்டு அன்னார் சென்று வந்தார்கள். நாங்கள் அதனை சீராக்கி ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் கொண்டு சென்று வந்தோம் எனவும் கூறினார்.

ஒருமுறை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் பள்ளிவாசலில் கிப்லாவின் திசையில் எச்சில் துப்பப்பட்டிருப்பதைக் கண்டார்கள். ஒருவர் அதனை சுத்தப்படுத்தினார். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் கரத்தில் இந்தக் குச்சிகளில் ஒரு குச்சி (கம்பு) இருந்தது. அன்னார் அதனைக் கொண்டு சுத்தப்படுத்தியவாறு கூறினார்கள்: உங்களில் ஒருவர் தொழுகையில் இருக்கும் நிலையில் முன்னோக்கி துப்ப வேண்டாம். ஏனென்றால் அவரது இறைவன் அவருக்கு முன்னால் இருக்கின்றான். அல்லாஹ்வின் முன் ஆஜராகியிருக்கும்போது முன்னோக்கி உமிழாதீர்கள். எனது கருத்தின்படி அப்போது கட்டளைகள் முழுமையாக இறங்கி இருக்கவில்லை.

எனவேதான் இடது பக்கமோ அல்லது கால்களுக்கு கீழோ துப்புங்கள் என இந்த அறிவிப்பில் வந்துள்ளது. இந்த அறிவிப்பு புகாரியிலும் இடம் பெற்றுள்ளது. அக்காலத்தில் சாதாரண மண் நிறைந்த இடமாகவே பள்ளிவாசல் இருந்தது. பிறகு மண் போட்டு

மூடி எச்சிலைச் சுத்தப்படுத்தியிருப்பார்கள். எனவேதான் கீழே துப்புங்கள் எனக் கூறப்பட்டுள்ளது. ஆனால் அசல் அறிவிப்பு ஒன்று உள்ளது. பிற்காலத்தில் சரியான தர்பிய்யத் ஏற்பட்டது. கட்டளைகளும் வந்திருந்தன. அதில் என்ன உள்ளது என்றால் உங்களிடம் உள்ள போர்வையின் துணி கொண்டு மூக்கையோ அல்லது எச்சிலையோ சுத்தம் செய்யும் தேவை ஏற்பட்டால் சுத்தம் செய்து கொள்ளுங்கள்.

ஏனென்றால் இப்போது பாருங்கள். கைக்குட்டை உள்ளது. Tissue paper உள்ளது. மேலும் பள்ளிவாசல்களில் விரிப்புகள் விரிக்கப்பட்டுள்ளன. எனவே கீழே துப்புவது ஆகுமானது என்ற பொருளல்ல. மாறாக, அக்காலங்களில் அது தற்காலிக அனுமதியாக வழங்கப்பட்டிருந்தது. அதன் பிறகு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் விளக்கமாகக் கூறினார்கள். ஒருவேளை மூக்கை சுத்தப்படுத்தவோ அல்லது எச்சில் துப்பவோ தேவை ஏற்பட்டால் போர்வையின் ஒரு முனையைக் கொண்டு அதனை துடைத்து விடுங்கள். பின்னர் வெளியே சென்று அதனை சுத்தம் செய்து விடுங்கள்.

அறிவிப்பாளர் கூறுகின்றார்: அதே இரவில் மிகவும் கனமழை பெய்தது. இஷா தொழுகைக்காக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அங்கு வருகை தந்தபோது திடீரென மின்னல் வெட்டியது. அப்போது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் பார்வை ஹஸ்ரத் கத்தாதா பின் நுஃமான் அவர்கள் மீது பட்டது. அப்போது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கத்தாதாவே! இரவின் இந்நேரத்தில் என்ன செய்து கொண்டிருக்கின்றீர்கள்? எனக் கேட்டார்கள். அதற்கு அன்னார், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! இன்று இஷா தொழுகைக்கு மிகக் குறைவான மக்களே வருவார்கள் என்பது எனக்கு தெரியும். மழையும் அதிகம் பெய்து வருகிறது. எனவே நான் தொழுகையில் கலந்து கொள்ள எண்ணி முன்பே வந்து விட்டேன் எனக் கூறினார்கள்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நீங்கள் தொழுது முடித்து விட்ட பிறகு நான் உங்களைக் கடந்து செல்லும் வரை காத்திருக்கவும். ஆக, தொழுகையை முடித்த பிறகு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் கத்தாதா அவர்களிடம் ஒரு கம்பு ஒன்றினை வழங்கினார்கள். இதை பெற்றுக் கொள்ளுங்கள் எனக் கூறினார்கள். மேலும் இது உங்களுக்கு பத்து அடி முன்பும் பத்து அடி பின்பும் ஒளி வழங்கும் எனக் கூறினார்கள். மேலும் நீங்கள் உங்கள் வீட்டில் நுழைந்தவுடன் அங்கு ஒரு மூலையில் ஏதாவது மனிதனின் நிழல் தென்பட்டால் அவன் பேசுவதற்கு முன்பே இந்தத் தடியைக் கொண்டு அவனை அடித்து விடவும். ஏனெனில் அவன் ஷய்த்தானாக இருப்பான். ஆக அன்னார்அவ்வாறே செய்தார்கள்.

ஹஸ்ரத் அபூ ஸயீத் கூறுகின்றார்கள்: இதன் காரணமாகவே நாங்கள் இந்த தடிகளை அதிகமாக விரும்புகிறோம். இந்த தடிகள் எங்களுக்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் வழங்கிய தடிகளாகும். நாங்கள் சிறப்பான முறையில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் பயன்பாட்டிற்காக அதனை சீராக்கிக் கொடுத்து வந்தோம். பின்னர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அதனை எங்களிடம் திருப்பிக் கொடுத்து விடுவார்கள். இன்னும் ஏராளமான பரக்கத்துகள் இந்த தடிகளில் உள்ளன. எனவேதான் இதனை நான் சீராக்கி விடுகிறேன் என்று அன்னார் கூறினார்.

பின்னர் அபூ ஸல்மா கூறுகின்றார்கள்: அபூ ஸயீதே! ஹஸ்ரத் அபூஹுரைரா ஜுமுஆ நாளன்று வரக்கூடிய நேரம் தொடர்பான ஹதீஸ்களை எங்களுக்கு கூறி வந்தார்கள் என்று நான் கூறினேன். உண்மையில் இது தொடர்பான கேள்வி கேட்கவே அன்னார் அங்கு சென்றார்கள். பின்னர் அங்கு தடிகளை அன்னார் சரி செய்து கொண்டிருப்பதைக் கண்டார். எனவே இதனிடையே அதன் விளக்கமும் கூறப்பட்டு விட்டது.

இப்போது அன்னார் மீண்டும் தனது கேள்வியின் பக்கம் வருகின்றார்கள். அறிவிக்கின்றார்கள். அபூஹுரைரா அவர்கள் இவ்வாறு ஹதீஸ் ஒன்றை கூறினார்கள். அதாவது ஜுமுஆ நாளன்று வருகின்ற துஆ ஒப்புக் கொள்ளப்படும் அந்த நேரத்தைக் குறித்து உங்களுக்கு தெரியுமா? எனக் கேட்டார்கள். அதற்கு அன்னார் கூறினார்கள்: நான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் அந்நேரத்தைக் குறித்துக் கேட்டேன். அதற்கு எனக்கு முதலில் அந்நேரம் அறிவிக்கப்பட்டது. ஆனால் லைலத்துல் கத்ர் இரவைப் போன்று அதுவும் எனக்கு மறக்கடிக்கப்பட்டது. பின்னர் நான் அங்கிருந்து புறப்பட்டு ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஸலாமிடம் சென்று விட்டேன் என அபூ ஸலமா கூறுகின்றார்கள்.

(முஸ்னது அஹ்மது பின் ஹம்பல் தொகுதி 4 பக்கம் 165 ஹதீஸ் எண் 11647 – 1998 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

முஸ்னத் அஹ்மது பின் ஹம்பலில் ஓர் அறிவிப்பு உள்ளது. அதில் ஜுமுஆ நாளன்று எந்த நேரத்தைப் பற்றி கூறப்பட்டுள்ளதோ அந்நேரம் தொடர்பாக பல்வேறு தரப்பட்ட அறிவிப்புகள் உள்ளன. அதில் கூறப்பட்டுள்ள மூன்று வேறுபட்ட அறிவிப்புகள் அல்லது விஷயங்கள் நமக்கு தெரிய வருகின்றன. முதலாவதாக, ஜுமுஆவிற்கிடையில் அந்நேரம் வருகின்றது. இரண்டாவதாக, பகலின் இறுதிப் பகுதியில் அந்நேரம் வருகின்றது என பல்வேறு அறிவிப்புகள் கூறப்பட்டுள்ளது. மூன்றாவதாக, அஸர் தொழுகைக்குப் பிறகு வருகிறது.

எனவே, அந்த அறிவிப்புகளை இங்கு எடுத்துரைக்கிறேன். ஹஸ்ரத் அபூஹுரைரா அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஜுமுஆ நாளைக் குறித்து கூறினார்கள். ஒரு முஸ்லிம் அடியார் தொழுது கொண்டிருக்கும் நிலையில் அதனை அடைந்தால் அல்லது அல்லாஹ்விடம் அந்நேரத்தில் எதனை வேண்டினாலும் அது நிச்சயம் அவருக்கு வழங்கப்படும். அப்படிப்பட்ட ஒரு நேரம் ஜுமுஆ நாளன்று வருவதாக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். மேலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தனது கரத்தால் அது மிகவும் குறுகிய நேரம் என்று சைகை செய்து காட்டினார்கள். அதாவது அந்நேரம் மிகக் குறைவான நேரமாக இருக்கும் எனக் கூறினார்கள்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் ஜும்ஆ.... ஹதீஸ் எண் 935)

அடுத்து ஸஹீஹ் முஸ்லிமில் அறிவிப்பு உள்ளது அபூ பரா பின் அபூ மூஸா அஷ்அரி அவர்களிடமிருந்து அறிவிக்கின்றார்கள். அன்னார் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் அவர்கள் என்னிடம், நீங்கள் உங்கள் தந்தையாரிடமிருந்து ஜுமுஆ நாளன்று வரும் நேரம் குறித்த ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் ஹதீஸைக் குறித்து செவியுற்றீர்களா? எனக் கேட்டார்கள். அதற்கு ஆம்! நான் கேட்டேன் எனக் கூறினேன். அந்த நேரம் என்பது இமாம் அமர்ந்ததிலிருந்து தொழுகையை முடிக்கும் வரையிலான நேரம் என ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறியதை நான் கேட்டேன் என அன்னார் கூறினார்கள்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் ஜும்ஆ.... ஹதீஸ் எண் 853)

அடுத்து ஓர் அறிவிப்பு உள்ளது. ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஸலாம் கூறினார்கள்: ஒருமுறை நான், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அமர்ந்திருந்தபோது கேட்டேன். நாம் அல்லாஹ்வின் வேதத்தில் ஜுமுஆ நாளன்று வருகின்ற ஒரு நேரத்தைப் பற்றிய குறிப்பைப் பார்க்கின்றோம். அதில் நம்பிக்கை கொண்ட அடியார் தொழுது கொண்டும், அல்லாஹ்விடத்தில் துஆ செய்து கொண்டும் இருக்கின்றார். ஆனால் அவர் அந்நேரத்தை அடையாளம் காணவில்லை. எனினும் அல்லாஹ் அவரது தேவையை முழுமை செய்து விடுகிறான்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் என்னிடம் சைகை செய்தவாறு அந்நேரம் சிறிய பகுதி அல்லது குறைந்த நேரமாகும் எனக் கூறினார்கள். பின்னர் நான் அது எந்த நேரம் எனக் கேட்டேன். அதற்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அது பகல் நேரத்தின் இறுதி நேரமாகும் என்று கூறினார்கள். அதாவது சூரியன் மறைவதற்கு சமீபத்திலுள்ள நேரமாகும். அது தொழுகைக்கான நேரமில்லையே? என நான் கேட்டேன். அதற்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஏன் இல்லை? எனக் கூறினார்கள். நம்பிக்கை கொண்ட அடியார் தொழுது விட்டு அமர்ந்து விட்டால் பின்னர் தொழுகைக்காக அவர் காத்திருந்தால் அவர் தொழுகையிலேயே இருக்கின்றார்.

(சுனன் இப்னு மாஜா.... ஹதீஸ் எண் 1139)

தொழுகைக்குப் பிறகு அவர் திக்ரே இலாஹி – இறைவனை நினைவு கூர்ந்து கொண்டிருந்தால் அது தொழுகையின் நிலையே ஆகும். மேலும் அதில் துஆவிற்கான நிலையே தோன்றும்.

அடுத்து ஓர் அறிவிப்பு ஹஸ்ரத் அபூஹுரைரா அவர்களிடமிருந்து உள்ளது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஜுமுஆ நாளன்று ஒரு நேரம் வருகின்றது. ஒரு முஸ்லிம் அந்நேரத்தில் அல்லாஹ்விடத்தில் நன்மையை வேண்டியவாறு கடந்தால் அல்லாஹ் அதனை அவருக்கு நிச்சயம் வழங்கி விடுவான். அது அஸருக்குப் பிறகான நேரமாகும்.

(முஸ்னது அஹ்மது பின் ஹம்பல் தொகுதி 13 பக்கம் 117 முஸ்னது அபூ ஹுரைரா ஹதீஸ் எண் 7688)

இங்கு ஜுமுஆ நாளன்று அஸருக்குப் பிறகான நேரம் என அறிவிப் வருகின்றது. இது முஸ்னத் அஹ்மது பின் ஹம்பலில் இடம் பெற்றுள்ள அறிவிப்பாகும்.

அடுத்து ஓர் அறிவிப்பில் வருகின்றது. ஹஸ்ரத் அபூ ஸலமா அவர்கள் அந்நேரத்தைக் குறித்துக் கேட்டார்கள். அப்போது 'ஆகிரு ஸஅத்துன் நஹார்' எனக் கூறினார்கள். அதாவது அது பகலின் இறுதிப்பொழுதின் நேரமாகும்.

(முஸ்னது அஹ்மது பின் ஹம்பல் தொகுதி 3 பக்கம் 847,848 முஸ்னது அப்துல்லாஹ் பின் சலாம் ஹதீஸ் எண் 24189 – 1998 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இது தொடர்பாக விளக்கமளித்தவாறு ஓரிடத்தில் தஃப்ஸீரில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறியுள்ளார்கள்: ஜுமுஆ மற்றும் ரமலானிற்கும் நெருங்கிய ஓர் ஒப்புமை உள்ளது. அது என்னவென்றால், ஜுமுஆவும் துஆ ஒப்புக் கொள்ளப்படும் நாளாகும். ரமலானும் துஆ ஒப்புக் கொள்ளப்படும் மாதமாகும்.

ஜுமுஆ தொடர்பாக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஒருவர் தொழுகைக்காக பள்ளிவாசலுக்கு வருகை தந்து, மௌனமாக அமர்ந்து திக்ரே இலாஹியில் ஈடுபட்டுக் கொண்டு இமாமிற்காக காத்திருக்க வேண்டும். பின்னர் மன நிறைவுடன் குத்பாவைக் கேட்டு ஜமாஅத்தான தொழுகையில் பங்கு பெற்றால் அந்த நபருக்கு இறைவனுடைய சிறப்பான பரக்கத்துகள் கிடைக்கும். மேலும் ஜுமுஆ நாளன்று ஒரு நேரம் வருகின்றது. அதில் மனிதன் என்ன துஆ செய்தாலும் அது ஒப்புக் கொள்ளப்படும்.

அன்னார் எழுதியுள்ளார்கள்: இறை சட்டத்திற்கேற்ப அந்த ஹதீஸிற்கு நிச்சயம் ஒரு விளக்கம் கொடுக்க வேண்டும். அல்லாஹ்வின் நடைமுறைக்கும், இறை சட்டத்திற்கும் ஏற்புடைய துஆக்களே ஒப்புக் கொள்ளப்படும். தவறான வகையிலான துஆக்கள் எந்நிலையிலும் ஒப்புக் கொள்ளப்படாது. அல்லாஹ்வின் நடைமுறைக்கு ஏற்புடைய மற்றும் ஆகுமான துஅக்களுமே ஒப்புக் கொள்ளப்படும். ஆயினும் இது மாபெரும் அருட்கொடையாக உள்ளது. அதே நேரத்தில் அது சாதாரண காரியமும் அல்ல.

ஜுமுஆ நேரம் சுமார் இரண்டாவது பாங்கு அல்லது அதற்கு சிறிது நேரத்திற்கு முன்பு தொடங்கி தொழுகைக்குப் பிறகு ஸலாம் கொடுக்கின்ற வரையிலான நேரமாகும். இந்த இரண்டு நேரத்தையும் சேர்த்து விட்டால் அதாவது ஜுமுஆ குத்பா சிறியதாக இருந்தால் அந்நேரம் அரை மணி நேரம் ஆகும். ஒருவேளை குத்பா நீண்டதாக இருந்து விட்டால் அந்நேரம் ஒன்றரை மணி நேரமாகக் கூட இருக்கும். இந்த ஒரு மணி நேரம் அல்லது ஒன்றரை மணி நேரத்தில் ஒரு தருணம் இவ்வாறு வருகின்றது. அதில் மனிதன் துஆ செய்தால் அந்த துஆ ஒப்புக் கொள்ளப்பட்டு விடும். ஆனால் அந்த 90 நிமிட காலத்தில் துஆ ஒப்புக் கொள்ளப்படும் நேரம் முதல் நிமிடத்திலா? அல்லது இரண்டாது நிமிடத்திலா? அல்லது மூன்றாவது நிமிடத்திலா? என்பது மனிதனுக்கு தெரியாது.

எந்த அளவுக்கு என்றால் அந்த 90 நிமிட காலத்தில் இறுதி வரை எந்த நிமிடத்தைக் குறித்தும் அது துஆ ஒப்புக் கொள்ளப்படுவதற்கான நேரம் என்று கூற முடியாது. அதாவது ஒரு வகையில் துஆ ஒப்புக் கொள்ளப்படக் கூடிய அந்த தருணத்தை 90 நிமிடத்தில் தேட வேண்டும். மேலும் எவர் 90 நிமிடம் வரை தொடர்ந்து துஆ செய்து கொண்டிருப்பாரோ அவரால் மட்டுமே துஆ ஒப்புக் கொள்ளப்படக் கூடிய அந்த தருணத்தைத் தேடுவதில் வெற்றி பெற முடியும். 90 நிமிடம் தொடர்ந்து துஆ செய்து கொண்டிருப்பதும், கவனத்தை நிலைநாட்டுவதும் அனைவராலும் செய்ய முடிகின்ற பணியல்ல. மிகக் கடினமான வேலையாகும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் எழுதியுள்ளார்கள்: சில நபர்களால் 5 நிமிடம் கூட தமது கவனத்தை நிலைநாட்ட முடிவதில்லை. உதாரணமாக, நான் தற்போது தொழுகைக்காக வந்துள்ளேன். மனிதன் இங்குமங்கும் பார்வையை வீசுகின்றான். நான் குத்பாவுக்கு முன்பு சிலரைக் கண்டேன். அவர்கள் சுன்னத்துகளைத் தொழுது கொண்டிருந்தனர். திடீரென அவர்களின் கண்கள் இங்குமங்கும் நோட்டமிட்டன. சுன்னத் தொழுவதில் ஒன்றரை அல்லது இரண்டு நிமிடங்களே ஆகின்றன. ஆயினும் அந்த குறுகிய நேரத்தில் கூட அவர்கள் சிலமுறை இடப்பக்கமும், சிலமுறை வலப்பக்கமும் பார்த்துக் கொண்டிருந்தனர். சிலமுறை பூமியின் பக்கமும், சிலமுறை வானத்தின் பக்கமும் பார்த்துக் கொண்டிருந்தனர். ஒன்றரை, இரண்டு நிமிடங்களில் கவனத்தை நிலைநாட்டுவதில் இந்நிலையென்றால் 90 நிமிடங்கள் வரை துஆ செய்து கொண்டிருப்பதும், திக்ரே இலாஹி செய்து கொண்டிருப்பதும், கவனத்தை ஒரே பக்கம் நிறுத்தி வைப்பதும் அவ்வளவு எளிய காரியமல்ல.

(குத்பாத்தே மஹ்மூது தொகுதி 33 பக்கம் 161,162 குத்பா ஜுமுஆ 30 மே 1952)

எனவே ஒரு தருணத்தைப் பற்றி கூறப்பட்டுள்ளது என்றாலும் அதற்காக தொடர்ந்து கவனத்தை நிலைநாட்டுவது அவசியமாகும். இது மாபெரும் உழைப்பை எதிர்நோக்கும் காரியமாகும். அதற்காக கடும் முயற்சிகளைச் செய்ய நேரிடும். அது எளிதான காரியமல்ல. நாம் துஆ செய்து அது அந்த நேரத்தில் கபூல் ஆகி விடும் என்பதல்ல. அது எந்த நிமிடம் என்பது மனிதனுக்கு தெரியாது. எனவே அசல் விஷயம் என்னவென்றால், அது எளிதான பணியல்ல என்று நான் குறிப்பிட்டேன். ஜுமுஆவின் பரக்கத்துகளைப் பெறுவதற்கு பெரும் உழைப்பின் அவசியம் உள்ளது.

நான் குறிப்பிடப் போகும் இரண்டாவது சஹாபியின் பெயர் ***அப்துல்லாஹ் பின் மஸ்ஊன்*** ஆகும். ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்ஊன் அவர்கள் குறைஷிக் கோத்திரமான பனூ ஜமாஅலைச் சார்ந்தவர் ஆவார்கள். அன்னாரின் தாயார் பெயர் சுஹைலா பின்த் அப்னஸ் ஆகும். அன்னார் ஹஸ்ரத் உஸ்மான் பின் மஸ்ஊன், ஹஸ்ரத் குதாமா பின் மஸ்ஊன் மற்றும் ஹஸ்ரத் சாயிப் பின் மஸ்ஊன்

EDITOR
Moulvai.O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
Muallim. A. KHALEEL AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 4 Thursday 12-19 Sep 2019 Issue No. 37 & 38

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

ஆகியோரின் சகோதரர் ஆவார்கள். இவர்கள் அனைவரும் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் அவர்களுக்கு உறவால் மாமா ஆவார்கள். ஏனெனில் ஹஸ்ரத் உமர் அவர்கள் இவர்களின் சகோதரியான ஸைனப் பின்த் மஸ்ஊன் அவர்களுடன் திருமணம் செய்திருந்தார்கள்.

யஸீத் பின் ரோமான் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்ஊன் மற்றும் ஹஸ்ரத் குதாமா பின் மஸ்ஊன் அவர்களும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தாரே அக்ரமிற்கு சென்று அங்கு இஸ்லாத்தின் பக்கம் அழைப்பதற்கு முன்னரே இஸ்லாத்தை ஒப்புக் கொண்டிருந்தார்கள்.

**(அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅது தொகுதி 3 பக்கம் 201 உமர் பின் கத்தாப் – 2012 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)**

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்ஊன் மற்றும் அன்னாரின் மூன்று சகோதரர்களும் அதாவது ஹஸ்ரத் குதாமா பின் மஸ்ஊன், ஹஸ்ரத் உஸ்மான் பின் மஸ்ஊன் மற்றும் ஹஸ்ரத் சாயிப் பின் மஸ்ஊன் ஆகியோர் அபிஸீனியாவை நோக்கி ஹிஜ்ரத் செய்தவர்களில் அடங்குவர். அபிஸீனியாவில் தங்கியிருந்த நிலையில் குறைஷிகள் ஈமான் கொண்டு விட்டதாக அவர்களுக்கு செய்தி கிடைத்தது. அதனால் இவர்கள் திரும்பிச் சென்றனர்.

(அஸதுல் காபா தொகுதி 2 பக்கம் 399 சாயிப் பின் மஸ்ஊன் – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இதைப் பற்றி முன்னரும் நான் கூறி விட்டேன். அதாவது முஸ்லிம்களின் துன்பங்கள் உச்சத்தை தொட்டபோது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் முஸ்லிம்களிடம், நீங்கள் அபிஸீனியாவிற்குச் செல்லுங்கள். அங்குள்ள அரசர் நீதிமான் ஆவார். அவரது ஆட்சியில் எவர் மீதும் அநீதியிழைக்கப்படுவதில்லை எனக் கூறினார்கள். அக்காலத்தில் அபிஸீனியாவில் வலிமையான கிறிஸ்தவ அரசாங்கம் நிலைபெற்றிருந்தது. அந்த அரசர் நஜ்ஜாஸி என அழைக்கப்பட்டார். எவ்வாறிருப்பினும், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறியதனால் ஐந்தாவது நபித்துவ வருடத்தில் 11 ஆண்களும் 4 பெண்களும் அபிஸீனியாவை நோக்கி ஹிஜ்ரத் செய்தனர்.

அது அவர்களின் நற்பாக்கியமாக இருந்தது. ஏனெனில் அவர்கள் மக்காவிலிருந்து வெளியேறி தெற்கு நோக்கி பயணம் செய்தவாறு ஷுஅய்பா என்ற இடத்தை அடைந்தார்கள். அது அக்காலத்தில் அரபு நாட்டின் துறைமுகமாக இருந்தது. அப்போது அல்லாஹ் அருள் செய்தான். அவர்களுக்கு வணிகக் கப்பல் ஒன்று கிடைத்து விட்டது. அது அபிஸீனியாவிற்கு செல்வதற்கு முற்றிலும் தயாராக இருந்தது. ஆக, பாதுகாப்பாக அவர்கள் அனைவரும் அதில் அமர்ந்து கொண்டனர். கப்பல் புறப்பட்டுச் சென்றது. அபிஸீனியாவைச் சென்றடைந்து முஸ்லிம்கள் மிக அமைதியுடன் வாழ்வைக் கழித்தனர். இறைவா! இறைவா! எனக் கூறியவாறு அவர்கள் அநீதிகளிலிருந்து விடுதலை பெற்றனர்.

ஆனால் சில வரலாற்றாசிரியர்கள் கூறியது போன்று அவர்கள் திரும்பி வந்ததும் (ஏற்கனவே கூறப்பட்டு விட்டது) அதாவது முஹாஜிரீன்கள் அபிஸீனியாவிற்குச் சென்று அதிக காலம் ஆகி இருக்கவில்லை. ஒரு வதந்தி வேமாகப் பரவியது. அதாவது அனைத்து குறைஷிகளும் முஸ்லிம்களாகி விட்டனர் என்ற செய்தி அவர்களுக்கு கிடைத்தது. மக்காவில் முற்றிலும் அமைதி ஏற்பட்டு விட்டது என்றும் கூறப்பட்டது. இந்த செய்தியின் விளைவு என்னவாயிற்று என்றால் முஹாஜிரீன்கள் சற்றும் சிந்திக்காமல் திரும்பி வந்து விட்டனர். அவர்கள் மக்காவிற்கு அருகில் வந்தடைந்த பிறகு அது தவறான செய்தி என்பது அவர்களுக்கு தெரிய வந்தது. முஹாஜிரீன்கள் அபிஸீனியாவிலிருந்து திரும்ப கொண்டு வருவதற்கு காஃபிர்கள் செய்த முயற்சியாக அது இருந்தது. இனி அவர்கள் மிகக் கடினத்தை எதிர்கொள்ள நேரிட்டது. அவர்கள் அனைவருக்கும் வேறெந்த வழியும் இல்லை. சிலர் வழியிலேயே திரும்பிச் சென்று விட்டனர். மேலும் சிலர் மக்காவின் ஆற்றல் படைத்த சிலரின் அடைக்கலத்தைப் பெற்றனர். பின்னர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத் செய்யுங்கள் என வழிகாட்டினார்கள். ஏனைய முஸ்லிம்களும் இரகசியமாக ஹிஜ்ரத் செய்வதற்கு ஆயத்தம் செய்தார்கள். சந்தர்ப்பம் கிடைத்ததும் மெது மெதுவாக வெளியேறிக் கொண்டே சென்றனர். இறுதியில் அபிஸீனியாவிற்கு ஹிஜ்ரத் செய்த முஹாஜிரீன்களின் எண்ணிக்கை 100 –ஐத் தொட்டது. அதில் 18 பெண்களும் மற்றவர்கள் ஆண்களாகவும் இருந்தனர். அதேபோன்ற இரண்டாவது ஹிஜ்ரத்தும் நிகழ்ந்தது.

எவ்வாறிருந்தும் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்ஊன் முதல் ஹிஜ்ரத்தின்போது திரும்பி வந்தார்கள். பின்னர் திரும்பிச் சென்றார்களா? இல்லையா? என்பது தெரியவில்லை என்றே அன்னாரைப் பற்றி அறிவிப்பில் வருகின்றது.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 146–149)

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்ஊன் ஹிஜ்ரத் செய்து மதீனாவை வந்தடைந்தார்கள். அப்போது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அன்னாருக்கும் ஸஹ்ல் பின் உபைதுல்லாஹ்விற்கும் இடையில் சகோதரத்துவ பந்தத்தை ஏற்படுத்தினார்கள்.

**(அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅது தொகுதி 3 பக்கம் 214 அப்துல்லாஹ் மஸ்ஊன் – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)**

ஓர் அறிவிப்பின் அடிப்படையில் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்ஊன் மற்றும் ஹஸ்ரத் உத்பா பின் ஆமிர் ஆகியோருக்கும் இடையில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் சகோதரத்துவ பந்தத்தை ஏற்படுத்தினார்கள்.

**(உயூனுல் அஸர் தொகுதி 1 தொகுதி 3 ஸிக்ருல் முவாகாத் – 1993 ஆம் ஆண்டு பைரூத்தில் அச்சிடப்பட்டது)**

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்ஊன் தனது மூன்று சகோதரர்களாக ஹஸ்ரத் உஸ்மான் பின் மஸ்ஊன், ஹஸ்ரத் குதாமா பின் மஸ்ஊன் மற்றும் சாயிப் பின் மஸ்ஊன் ஆகியோருடன் பத்ர் போரில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடன் பங்கு பெற்றார்கள். ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்ஊன்அவர்கள் ஹஸ்ரத் உஸ்மான் அவர்களின் கிலாஃபத் காலக்கட்டத்தில் ஹிஜ்ரி 30 ஆம் ஆண்டு தனது 60 –வது வயதில் மரணமடைந்தார்கள்.

**(அஸதுல் காபா ஃபீ மஃரூஃபத்துஸ் சஹாபா தொகுதி 2 பக்கம் 399 சாயிப் பின் மஸ்வூன் – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)**

அல்லாஹ் இந்த சஹாபாக்களின் அந்தஸ்துகளை மேன்மேலும் உயர்த்திக் கொண்டே செல்வானாக!

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad